விலைசதம் 20




சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2000, கார்த்திகை16 ௳ திங்கள் (1-12-69) நம்ஊர் 20 புத்தகம் 23 இதழ் 3



# கருணாநிதி 'டிகால்' ஆவாராம்!



'கனடாவுக்கு ஒரு முறை முன்னாள் பிரெஞ்சு அதிபராயிருந்த டீகால் சென்றிருந்த போது பிரெஞ்சு கனேடியர்களுக்கு சார்பாக அவர் நிகழ்த்திய உரை கனடாவில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது போல தமிழ் நாடு முதல்வர் கலைஞர் கருணாநிதியின் உத்தேச இலங்கை விஜயமும் அமைந்து விடக் கூடும்'

—இவ்வாறு அச்சம் தெரிவித்திருக்கிறார் சிங்கள மகாஜனக்கட்சியின் தலைவரான திரு. ஆர். ஜி. சேனநாயகா. அவர் தமது பேச்சில் மேலும் கூறியிருப்பதாவது:—

'கலாசார விஜயம் என்ற போர்வையில் திரு. கருணாநிதி இங்கு வந்து தனது தீவிரவாதக் கொள்கைகளை இங்கு பரப்ப முயற்சிக்கிறார்.

ஒரு நாட்டின் தலைவர் வருகிறாரென்றால் அதற்காக இராசாங்க உபசரணை இருக்க வேண்டுமா? அவருக்கு விசேசமான முறையில் அரசாங்கம் வரவேற்பளிக்கத் திட்டமிட்டிருக்கிறதா? திரு. கருணாநிதியின் தீவிர வாதக்கொள்கைகள் அரசுக்கு தெரியாதா? அவர் இங்கு வந்தால் தமிழ்—சிங்கள மக்களுக்குள் நெருக்கடி நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாதது.



திரு. கருணாநிதியின் வருகை தடை செய்யப்பட வேண்டும்' இவ்வாறு ஆர். ஜி. கூறியுள்ளார்.

'ஒரு வடநாட்டான் வந்தால் அவனை வரவேற்று உபசரிக்கும் இந்த நாட்டுச் சிங்கள தலைவர்கள் அயலிலிருக்கும் தென்னாட்டான் ஒருவனை—4 கோடி தமிழ் மக்களின் தலைவனை இங்கு வராமற் தடுக்க வேண்டுமென்று கூச்சல் எழுப்புவது ஏன்? தென்னாட்டின் மீது ஏன், இத்தனை துவேஷம்?

## ஆர். ஜி. காட்டும் பூச்சாண்டி!

கரம் நீட்டி வரவேற்கும் சிங்கள மக்கள் தென்னாட்டினர் மீது ஏன் சீறி விழுகிறார்கள்? வெவ்வேறு நாடுகளின் தலைவர்கள் எல்லாம் இந்த நாட்டுக்கு வருகை புரியும் போது வரவேற்று உபசரிக்கும் சிங்கள மக்களுக்கு திராவிடத்தின் தலைவன் மீது ஏன் இத்தனை வெறுப் புணர்ச்சி?

கருணாநிதி மட்டும் இந்த நாட்டுக்கு வரக் கூடாதா? இராசாங்க மரியாதையைப் பெறக் கூடாதா? அயலிலிருக்கும் தென்னாட்டு மக்களின் வெறுப்பினை வளர்த்துக் கொள்வது பொதுவாக இலங்கைக்கும் குறிப்பாக சிங்கள மக்களுக்கும் நல்லதல்ல வென்று கூறி வைக்க விரும்புகிறேன்.'

## வட நாட்டுக்காரனுக்கு வரவேற்பு; தென்னாட்டான் என்றால் எதிர்ப்பா?

—மணவைத் தம்பி

—இவ்வாறு திரு. ஆர். ஜி. சேனநாயகாவின் அறிக்கைக்குப் பதிலளித்து இ. தி. மு. க. பொதுச் செயலாளர் திரு. ஏ. எஸ். மணவைத்தம்பி விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளனர். அவர் தமது அறிக்கையில் மேலும் கூறியுள்ளதாவது:

இங்கு வரும் வடநாட்டுத் தலைவர்களை — இருகரம் நீட்டி வரவேற்கும் ...

'அண்மையில் இங்கு விஜயம் செய்த வடநாட்டைச்சேர்ந்த திருமதி விஜயலட்சுமியை அமைச்சர்களே வரவேற்று கௌரவித்திருக்கும் போது 4 கோடித் தமிழர்களின் தலைவனும் தமிழ் நாட்டின் முதல்வருமாகிய கலைஞர் ...

'திரு. கருணாநிதி இங்கு அரசியல் பேசவரவில்லை; கலாசார தூதராகவே வர விரும்புகிறார். அவரது வருகைக்கு முட்டுக்கட்டை போட்டு, இந்நாட்டுத் தமிழர்களின் அன்பினை இந்த அரசு இழக்காதென்று நம்புகிறேன்.

சிறிமா - சாத்திரி ஒப்பந்தச் சட்டத்தால்

## எட்டியாந்தோட்டை, அட்டன், நாவலப்பிட்டி பகுதி தமிழர் வசமாகுமாம்!

'சிறிமா—சாத்திரி ஒப்பந்த அமுல் சட்டம் சரியாக அமுல் நடத்தப்பட்டால், நாவலப்பிட்டி, அட்டன், எட்டியாந்தோட்டை போன்ற மலையகப் பகுதிகள் தமிழர் பிரதேசமாகிவிடும். இதை தடுத்து நிறுத்த சிங்களவர்கள் முன்வர வேண்டும். வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் சிங்களவர்கள் பெருந்தொகையாக குடியேற்றப்பட்டு அம் மாகாணங்களும் சிங்களமயமாக்கப்பட வேண்டும்'

—இவ்வாறு எட்டியாந்தோட்டையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய முன்னாள் நீதியரசர் திரு. ஹேமாபசநாயக்க கூறியுள்ளார்:

திரு. பசநாயக்கா மேலும் பேசியதாவது:—

'இந் நாட்டில் தமிழர்கள் வேகமாகப் பரவிவருவதை தடுத்து நிறுத்த நடவடிக்கையெடுக்கப்படாவிடின், சிங்கள இனம் அழிந்து போய் விடும். வடக்கு, கிழக்கு, மலைநாட்டுப் பகுதிகள் ஏற்கெனவே தமிழ் இராட்சியங்களாகிவிட்டன. எனவே எவ்வளவு பெருந்தொகையான சிங்களவர்களை இவ்விடங்களில் குடியேற்ற முடியுமோ அவ்வளவு பேரை குடியேற்ற அரசாங்கம் நடவடிக்கையெடுக்கவேண்டும்.

'வடக்கு, கிழக்கு, மலைநாடு, சிங்களவர்களுக்கு மட்டுமேயுரிய பிரதேசமாக்கப்பட வேண்டும். திரு. டட்லிசேனநாயக்காவும், திரு. செல்வநாயகமும் இரகசிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருந்தனர் என்பது இப்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகிவிட்டது. சிங்களவர்களே பெரும்பான்மையினராக இருக்கும் போது இத்தகைய ஒப்பந்தங்கள் ஏன் செய்யப்பட வேண்டும்? (9ம் பக்கம் பார்க்க)

## வடபகுதியில் சிங்களத்திற்கு இடமில்லையாம்!

"நாட்டின் ஆட்சிமொழியாக சிங்களம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பினும், வடபகுதியில் எந்த அரசாங்க அலுவலகத்திலும் சிங்களத்துக்கு இடமளிக்கப்படவில்லை. இதனால் அரசாங்கத்தின் மொழிச்சுற்றறிக்கைகளை அமுல் நடத்த முடியாமலிருக்கிறது. வட-பகுதி அரசாங்க அலுவலகங்களில் எல்லா அலுவல்களும் தமிழிலும் ஆங்கிலத்திலுமே நடைபெறுகின்றன. வடபகுதியில் கடமைபுரியும் அரசாங்க ஊழியர்களில் பெரும்பாலோர் தமிழர்களாக இருப்பதால் அவர்கள் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை அமுல் செய்வதில் அக்கறை காட்டவில்லை"

—இவ்வாறு அரசாங்க அதிபர்கள் மாநாட்டில் வடபகுதி அரசாங்க அதிபர் திரு. பீட்டர்ஸ் கூறியதாக 'சன்' ஆங்கில ஏடு (26-11-69) ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் காவ




கே.எஸ்.ஆனந்தன்

# கர்ப்பக் கிருகம்

## அத்தியாயம் (13)

தனிமனித வாழ்வில் மறைப்பதற்கென முயற்சிக்கும் சிலகாரியங்கள் மற்றவர்கள் அறிந்து விடுவார்களோ என்ற ஐயப்பாடு தோன்றும் பொழுது மனதில் பல ஹீனம் தோன்றிவிடுகின்றது. அத்தகையதொரு ஐயம் கீதாவின் மனதில் தோன்றிய அதேவேளையில் கடந்த காலமும் எதிர்காலமும் சேர்ந்து திசை தெரியாத ஓர் சூனியப் பெருவெளியாய், பயங்கர இருட்குகையாய் தோன்றிற்று. உடனேயே அவள் மயக்கம் போட்டு விழுந்து விட்டாள்.

என்ன செய்வதென்று தெரியாது பதறிவிட்டான் பிரகாஷ். சில சினிமாக் காட்சிகளில் வருவது போன்று கதாநாயகி மயக்கம் போட்டதும் டாக்டர் வந்து பார்த்து உங்களுக்கு குழந்தை பிறக்கப் போகின்றது என்று சொல்வது போலத்தான் தன் மனைவியின் நிலையும் இருக்குமோ என ஐயுற்றவன் உடனே லேடி டாகடருக்கு போன் செய்தான்.

சில நிமிடங்களிலேயே டாக்டர் வந்து விட்டார். தனியாக அவளைப் பரிசோதனை செய்தார்.

பிரகாஷ் வெளியே இருந்தானாயினும் அவன் மனம் நிலையின்றித் தவித்தது. டாக்டர் சந்தோஷச் செய்தியுடனேயே வருவார் என்று நம்பினான்.

டாக்டர் அறையை விட்டு வெளியே வந்து 'மிஸ்டர் பிரகாஷ்' என்றாள்.

'என்ன டாக்டர்............?' என்றான் ஆவல் மேலிட்டவனாய்.

'ஏதாவது அதிர்ச்சி தரும் செய்தி கூறினீர்களா?'

'டாக்டர் மனைவிக்கு?'

'ஒன்றுமில்லை மிஸ்டர் பிரகாஷ். மயக்கம்தான்: இன்னும் சில நிமிடங்களில் சுகமாகிவிடும்'

'டாக்டர் என்று கூறியவன் நடந்த விடயங்களை கூறிமுடித்து விட்டு டாக்டரின் விழிகளை நோக்கினான்.

'மிஸ்டர் பிரகாஷ் உங்கள் மிஸ்ஸிஸ்ஸையும் கூட்டிக்கொண்டு ஹாஸ்பிட்டலுக்கு வாருங்கள். உங்களுக்கு வசதியான நேரம்' என்று கூறிவிட்டுச் சென்றாள்.

டாக்டர் சென்ற பின்பு பிரகாஷ் சென்று கீதா படுத்திருந்த கட்டிலின் ஓரத்திலிருந்தான். அவளுடைய முகத்தையே கூர்ந்து பார்த்தான்.

அழகான சந்திரபிம்பத்தில் காணப்பட்ட களங்கம் போல அவள் முகத்தின் கருவிழிகளைச் சுற்றிவர உள்ள கருமையான வளையம் அந்த விழிகளையே அசிங்கப்படுத்திக் காட்டியது.

அவளையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்த அவனுடைய விழிகளில் நீர் முத்துக்கள் பொல பொலவென உதிர்ந்து அவள் முகத்தில் விழுந்து தெறித்தன.

'கீதா கீதா' என்று அவள் தலையை வருடினான்.

அவள் இமைகள் படபடத்தன. உதடுகள் அசைந்தன. 'அத்தான் அத்தான்' உதடுகள் அழைக்க முயன்ற போதும் ஒலி எதுவும் பிறக்கவில்லை.

'கீதா—கீதா'

'ம்' அவள் கண்கள் பரிவுடன் அவனைப் பார்த்தன.

'என்ன கீதா?'

'ஒன்றுமில்லை அத்தான் பயந்துவிட்டீர்களா?'

'இருந்தாற் போல மயங்கி விழுந்தால் பயப்படாமல் என்ன செய்வதாம்?'

'அத்தான்' என்று எழுந்த அவளை அணைத்துக் கொண்டான்.

டாக்டர் வந்தது முதல் நடந்த காரியங்களை ஒவ்வொன்றாக அவன் கூறி முடித்தபோது 'நீங்கள் சரியான பயந்தவர்' என்றாள் கீதா.

'என்ன கீதா நீ மயங்கிக் கிடக்க என்னைப் பார்த்துக் கொண்டிருக்கும்படி கூறுகின்றாயா?'

'என்மீது உங்களுக்கு எவ்வளவு பிரியம் என்பதை செயல் மூலம் உணர்த்துகின்றீர்கள் அப்படித்தானே?'

'பைத்தியம் பைத்தியம். உன்னில் நான் அன்பு இல்லையென்றால் கல்யாணம் செய்திருப்பேனா?' என்று அவள் கரங்களைப் பற்றி தன் கன்னத்துடன் அணைத்தான்.

'அத்தான் என்னைக் கைவிடமாட்டீர்களே'

'கீதா இது என்ன பைத்தியக்காரத்தனம்' என்று அவளை இழுத்து இறுக அணைத்துக் கொண்டு கண்ணீர் விட்டான்.

'அத்தான்'

'ம், என்ன கீதா.'

'உண்மையாகவே ஆஸ்பத்திரிக்குப் போகத்தான் வேண்டுமா?'

'ஆமாம் ஏன் கீதா. போவதினால் உனக்கு ஏதும் கஷ்டமா?'

'இல்லை.'

'அப்புறம் ஏன் பயப்படுகின்றாய்?'

'வந்து.........'

'என்ன வந்தும் [illegible] ஒருமுறை பரிட்சை செய்துதான் பார்த்து விடுவோமே. அதனால் என்ன வந்துவிடப் போகின்றது?' என்று அவளைத் தேற்றினான் பிரகாஷ்.

மறுநாட் காலையே டாக்டரிடம் சென்று வந்தனர் பிரகாஷ் தம்பதிகள். வரும் பொழுது பிரகாஷ் முகத்தில் ஒளியில்லை. அவன் ஆழ்ந்த யோசனையில் வாழ்ந்து போனவனாகக் காணப்பட்டான்.

'அத்தான்.'

'ம்'

'என்ன சொன்னார்கள்?'

'ஒன்றும் பேசாமல் வாரும். வீட்டிற்குப் போன பின்பு ஆறுதலாகக் கதைக்கலாம், உன் நிலை பற்றி எதுவுமே டாக்டர் கூறவில்லை, என்றான்.

'மனிதரால் ஆகக்கூடியது எதுவுமேயில்லை அத்தான்.'

நமது தொடர்கதை

அவள் கூறிய எதுவும் பிரகாஷின் செவியில் விழவில்லை. அவன் மனம் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது.

லேடி டாக்டர் கூறியவிடயங்கள் அவன் மனதைக் குடைந்து கொண்டிருந்தன; கீதா டாக்டரிடம் வர மறுத்ததற்கும், டாக்டர் கூறிய விடயத்துக்கும் தொடர்பு இருக்கவேண்டும். இல்லையெனில் கீதா டாக்டரிடம் வர ஏன் மறுக்கவேண்டும்? கீதாவிடம் கேட்டறியலாம் என்றால் கீதாவின் மனதைத் துன்பப்படுத்தும் எண்ணம் அவனுக்கு இருக்கவில்லை.

இரவு வெகுநேரமாகிவிட்டது. முன்னிரவு காலம், முன்னிரவு முடிந்து தேய்பிறைச் சந்திரன் கீழ்வானில் மேலெழுந்து கொண்டிருந்தான். பிரகாஷிற்கு உறக்கம் வரவில்லை, ஆனால் கீதா அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள்.

அவளைப்பார்த்தால் கள்ளங்கபடமற்றவளாகத் தோன்றினாள். மனதில் எதுவித கவலையுமின்றிக் காணப்பட்டாள்' அவளைப்பற்றி தவறாக நினைத்துப்பார்க்கவும் அவனால் முடியவில்லை. ''கடவுளே! நான் யாருக்கு என்ன கொடுமை செய்தேன். என்னை ஏன் இப்படித் தடுமாற வைக்கின்றாய்? என் வாழ்வே சூனியமாகிவிடுமா?'' என்று வாய் [illegible] கண்ணீரைத் துடைத்துக் கொண்டே கட்டிலில் சாய்ந்தான்.

காலை விடிந்தது. கீதா நேரத்துடனே எழுந்து விட்டாள் என்பதைக் கண் விழித்த பொழுதுதான் உணர்ந்தான் பிரகாஷ்.

தலை விண்ணென்று வலித்தது. இமைகள் கனத்தன. எழுந்திருக்கவே முடியாத நிலையில் மீண்டும் படுத்துக் கொண்டான்.

காலைக்கடன்களை முடித்துக்கொண்டு படுக்கையறைக்குள் நுழைந்த கீதா கணவன் எழுந்திருக்காததைக் கண்டதும் பதறிக் கொண்டோடி ''அத்தான்'' என்றாள்.

'கீதா'

'என்னத்தான்'

'தலைவலிக்கின்றது கீதா'

'நெருப்பாய் கொதிக்குதே'' என்று அவன் தலையை வருடிவிட்டாள்;

'அத்தான் இரவு பூராயோசித்துக்கொண்டிருந்தீர்களா?'

'ஹிகும்'

'அப்புறம் ஏன் அத்தான் தலைவலி வருகுது?''

'என்ன கீதா' என்று சிரித்தான்.

அவனுடைய புன்சிரிப்பையே பார்த்துப் பழகிப் போன கீதாவிற்கு அவனுடைய வேதனை நிறைந்த சிரிப்பின் பின்னே ஏதோ மறைந்திருப்பது போன்ற பிரமைமேவி'' எனக்கு எல்லாம் தெரியும் அத்தான்'' என்றாள்.

'என்ன தெரியுமாம்?'

'நேற்று டாக்டரிடம் போனது முதலே நீங்கள் ஏக்கத்துடன் திரிவதை நான் அவதானித்தேன்'

'ஆகவே...'

'உங்களுக்கு எதற்கும்கேலிதான் போங்கள்.'

'என்னால் எழுந்திருக்கவே முடியவில்லையே. எங்கே போவேன்?'

'ஒரு இடமும் போகவேண்டாம். நான் எல்லாம் இங்கேயே கொண்டுவருகின்றேனே' என்று கூறிவிட்டுச் சென்றாள் கீதா.

பிரகாஷின் மன அலைகள் ஆர்ப்பரித்து மோதின. அவன் மனத்துள் புழுங்கும் விடயத்துக்கான காரணத்தை எப்படியோ அவள் அறிந்துவிட்டாளாயினும், எப்படி அவளிடம் டாக்டர் கூறிய விடயத்தைக் கேட்பது என்று புரியவில்லை.

ஈருடல் ஓர் உயிர் ஓர் உணர்வு என்று உறவாடிய அவளிடம் டாக்டர் கூறிய விடயம் பற்றிக் கேட்டுவிட்டால் குடும்பத்தில் சந்தேகப் பேய் புகுந்துவிடுமே எனப் பயந்தான் பிரகாஷ்.

கணவன் மனைவியருக்கிடையில்கூட ஒருவர்க்கொருவர் தெரியாத இரகசியங்கள் மறைந்திருக்கின்றனவா? எனக்குத் தெரியாமலே என் மனைவி இக்காரியத்தைச் செய்திருப்பாளா? அப்படிச் செய்யக் காரணம் எதுவுமிருப்பதாகவும் பிரகாஷிற்கு புரியவில்லை.

'அத்தான் பல்லை விளக்கிவிட்டு முகத்தை கழுவுங்கள் என்று கூறிக்கொண்டே உள்ளே வந்தாள் கீதா.

'கீதா...'

'ம்'

'கொலிஜ்சுக்கும் போன் செய்துவிடும் லீவுக்கு.'

'சரி அத்தால்' என்று கூறிவிட்டு போன் செய்யச் சென்றாள் கீதா.

மாலை வெய்யிலின் மஞ்சள் நிறம் பார்க்குமிடமெல்லாம் பொன்மயமாக காட்சியளித்தன. சாய்வு நாற்காலியில் படுத்துக் கிடந்தான் பிரகாஷ். வேறு நாற்காலியில் ஆழ்ந்த யோசனை வசப்பட்டவளாய் சோர்வுற்றுக் காணப்பட்டாள் கீதா. அவள் மனவானில் பல்வேறு எண்ணச் சுழல்கள். வேதனைக் கீறல்கள். துன்பச்சுமையின் அழுத்தல்கள்.

முதல்நாளே கணவனுக்குச் சுகயீனம் என்று அவள் அக்காளுக்கு எழுதிவிட்டாள்.

இரவு நெருங்கிக்கொண்டு வந்தது. இரவின் பயங்கரத்தை நினைக்கவே அவள் மனம் பயந்தது. கணவன் நோயினால் துன்புற்றிருக்கும்பொழுது அவளால் இரவின் தனிமையைப் பொறுத்து வாழ முடியவில்லை. ஆகவே இரவு வரப்போவதை எண்ணிப் பயந்தாள்.

சில மனிதர்களுக்கு அகரப்பசி இருப்பது போன்று சிலருக்கு அசுர உணர்வுகள். அந்த உணர்வுகளை தன் வழிப்படுத்தி ஆளும்தன்மை அவர்களுக்கு இருப்பதில்லை. அந்தவகையில் ஒருத்திதான் கீதாவும் என்பதை அவளே உணர்வாள். மற்றவர்களுக்கு ஏனோ அது புரிவதில்லை!

அன்று காலை விடிந்தது முதலே அவள் உள்ளம் தடுமாறிக்கொண்டிருந்தது; அவளுக்கு கணவன் மீதிருந்த பாசம் அத்தனையும் பயமாக மாறிவிட்ட போது அவன் நோயின் காவலனை அவளுக்குத் தோற்றமளித்தான்.

பிரகாஷைப் போன்ற ஓர் அன்புக் கணவனைப் பெறுவதென்பது எல்லோர்க்கும் எளிதான காரியமன்று. கிடைத்தற்கரிய ஒருவனைக் கணவனாகப் பெற்றாள். குழந்தையில்லாப் பிரச்சினை அவளுக்கு ஒரு யமனாக வந்து தொலைத்துவிட்டது. அந்தக் கணம் முதல் கீதா கலங்க ஆரம்பித்தாள். கணவன் மீது கொண்ட அளவிடற்

(9ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சி. க. சண்முகநாதன்,
வண்ணார்பண்ணை.

கே: சமஷ்டி என்றவுடன் முழுச்சிங்களவரும் வெறுக்கின்றனர் என்று 'போனவின்' மகன் கூறியிருக்கின்றாரே, சமீபத்தில் கண்டிப் பகுதியிலிருந்து சமஷ்டி வேண்டுமென்று குரல் எழுப்பப்பட்டதே, அது இவருக்குத் தெரியாதா? 'திறமையின்' குட்டிக்குத் தங்கள் பதில் என்ன?

ப: சமஷ்டியென்றால் என்னவென்றே விளங்கிக் கொள்ளாமல் அரற்றும் போனவின் 'பொடிப் பயலுக்கு' கண்டி மக்களின் சமஷ்டிக் கோரிக்கை எங்கே புரிந்திருக்கப்போகிறது! அப்பாவைப்போல பொய் சொல்லியே அரசியல் நடத்தலாம் என்று தப்புக் கணக்குப் போட்டுள்ள இவருக்கு அப்பாவின் பொய் மூட்டைகள் பொலபொலத்து வீழ்வது கூட இன்னும் புரியாதது பரிதாபந்தான்!

கே: தொடக்கத்தில் மூன்று மாதமும் பின்னர் மூன்று வருடமும் தகப்பனார் கேட்டாரே... உரிமைகள் பெறுவதற்கு... ஆனால் மகன் 5 வருடங்கள் கேட்டுள்ளாராமே, இருவரது தகிடு தத்தங்களுக்கும் தங்களது முடிவான பதில் என்ன?

ப: சொல்வதுதான் சொல்கிறோமே பொய் - அதைக் கொஞ்சம் பெரிய பொய்யாக கூறிவைப்போமே என்று மகன் நினைக்கிறார் போலும்! தகப்பனும் மகனும் சேர்ந்துவிடும் தகிடுதத்தங்களுக்கு அடுத்த தேர்தலில் தமிழ் மக்கள் தக்க பதில் கூறியே தீருவார்கள் என்பதுதான் எனது முடிவான பதில்!

ஃ

கே. சுப்பிரமணியம்,
புங்குடுதீவு.

கே: தமிழ் அரசுக் கட்சிப் பொதுச்சபையிலும் செயற்குழுவிலும் இரகசியமாக நடைபெறும் விவாதங்கள் தினபதிப் பத்திரிகையில் இப்போது பல மாதங்களாக வெளிவருவதில்லையே என்ன காரணம்?

ப: ஊர்காவற்றுறை பா. உ. வி. நவரத்தினம் தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டது தான்!

ஃ

இ. தங்கராசா,
வ/புதுக்குடியிருப்பு.

கே: அடுத்த தேர்தலின் பின் ஜீ. ஜீ.யும் நவமும் சந்தித்தால் என்ன கதைப்பார்கள்?

ப: கதைப்பதென்ன! ஒருவரையொருவர் வேதனையோடு பார்த்தபடி கொட்டாவி விடுவார்கள்!

கே: தந்தை செல்வாவுடன் போட்டியிடுவோர் தம் கட்டுப்பணத்தை பெறுவார்களா?

ப: கட்டுப்பணத்தை மீளப் பெறும் ஆசையிருந்தால் எதற்காக அவர்கள் தந்தையுடன் போட்டியிலிறங்கப் போகிறார்கள்?

கே: தமிழரசுக் கட்சி தோன்றியிராவிட்டால் இன்று தமிழன் நிலை என்ன?

ப: தமிழன் அரைச்சிங்களவனாக இனமாற்றம் செய்யப்பட்டிருப்பான்; தமிழ்க் குழந்தைகள் மீது சிங்களம் போதனாமொழியாக திணிக்கப்பட்டிருக்கும்; தமிழ்ப்பிரதேசம் என்று ஒன்று இன்று இருந்திருக்காது!

ஃ

சு. உலகநாதன்,
பண்டாரவளை.

கே: கல்வியா ஒழுக்கமா சிறந்தது?

ப: இரு கண்களில் எது சிறந்தது?

கே: 1969ம் ஆண்டின் தனிச் சிறப்பு என்ன?

ப: இலங்கை வாழ் தமிழ் மக்களைப் பொறுத்தவரை யூ. என். பி.யுடன் கொண்டிருந்த அரசியல் தொடர்பை தமிழரசுக்கட்சி துண்டித்துக் கொண்டது — உலகைப் பொறுத்தவரை மனிதன் சந்திரனை இரு தடவைகள் வெற்றிகொண்டது!

கே: கோழியின் பிள்ளை முட்டையா அல்லது குஞ்சா?

ப: கோழி யாருக்குத்தாய்? —முட்டைக்கா குஞ்சுக்கா?

ஃ

பொ. கலைச்செல்வி,
ஏழாலை.

கே: தினபதி ஆசிரியரின் மூளையா? சுயாட்சிக் கழகத் தலைவரின் மூளையா சிறந்தது?

ப: மன்னிக்கவும் — இதற்குப் பதில் சொன்னால் மற்றொன்று கோபிக்கும் — அது 'களிமண்'!

கே: மனிதன் எப்போது தத்துவஞானியாகிறான்?

ப: சுடலையிலிருந்து வீட்டுக்கு திரும்பிக்கொண்டிருக்கும் சந்தர்ப்பங்களிலும் ஆசைப்பட்டது கிடைக்காத போதும்.

கே: முதலமைச்சர் கருணாநிதியை தமிழரசுக் கட்சி தன் சார்பில் இலங்கைக்கு வருமாறு அழைக்குமா?

ப: தமிழரசுக் கட்சி அழைக்கலாம்; ஆனால் சிங்கள ஆட்சி அனுமதி அளிக்குமா?

ஃ

பி. யோகானந்த்,
உடுப்பிட்டி.

கே: தனிப்பெருந் தலைவர் தமிழரசுக் கட்சி சாதித்ததென்ன என்ற கேள்வியையே பல இடங்களிலும் எழுப்பி தமிழரசைத் திட்டித் தீர்க்கிறாரே...! அவரைப் பற்றி என்ன நினைப்பது?

ப: பிள்ளையே பெறாத மலடி அடுத்த வீட்டுக்காரி பெற்ற பிள்ளையை பற்றி 'நொட்டை' சொல்லித் திரிந்தால் அவளைப் பற்றி என்ன சொல்வது?

ஃ

மு. நடராசா,
நயினாதீவு.

கே: மக்கள்திலகம்எம். ஜி. ஆரின் விலாசம் என்ன?

ப: அவர்தான் மக்கள் திலகம் ஆயிற்றே—எம். ஜி. ஆர். எம். எல். ஏ. சென்னை என்றாலே கடிதம் அவர் கைக்கு பத்திரமாகப் போய்ச் சேர்ந்து விடுமே!

ஃ

நெல்லை ஐ. நடேஸ்,
நெல்லியடி.

கே: தனிப்பெருந் தலைவரின் சாதனை என்ன?

ப: தம்முடைய பெயரை சொல்ல ஒரு 'ஜூனியரை' தயாரித்து விட்டது தான்!

கே: கடமை வீரர் திரு.வி. என். நவரத்தினத்தை தமிழ் காங்கிரஸ் ஏடு தாக்குவதேன்?

ப: கடமை தவறியவர்கள் கடமை வீரரை கேலி செய்யாமல் வேறு என்ன செய்வார்கள்!

சி. கந்தசாமி,
தொண்டமானாறு.

கே: தமிழ் இனத்திற்கு அளவு கடந்த துரோகத்தை புரிந்த பின்பும் பொன்னம்பலம் தமிழர்கள் முன்னிலையில் வெட்கமில்லாமல் மிகவும் துணிச்சலோடு அதிகாரப் பாணியில் குரல் கொடுக்கிறாரே இதுதான் புதினத்தின் புதினம், அவரை பின் தொடர்பவர்களும் துரோகிகள்தானே?

ப: நிச்சயமாக!—துரோகிகளுக்கு பக்கவாத்தியம் வாசிப்பவர்களும் கடைந்தெடுத்த துரோகிகள் தான்!


# மேலும் ஸ்னோ-வைட் பரிசுகள் பெறுங்கள்

1-ம் சித்திரக் குள்ளர் தொடங்கி 6-ம் சித்திரக் குள்ளர்வரை, ஸ்னோ-வைட் சோப் மேலுறைகளில் அச்சிடப்பட்டிருப்போர், ஸ்னோ-வைட் விடுகதை போட்டியில், பின்வரும் மாபெரும் பரிசுகளைப் பெற்றுத் தருவார்கள்.
1-ம் பரிசு 1500 ரூபாவும், இலெக்ரோ குளிருட்டி ஒன்றும்.
2-ம் பரிசு 1000 ரூபாவும், சிங்கர் தையற்பொறி ஒன்றும்.
3-ம் பரிசு 500 ரூபாவும், தங்கப் பவுன் காப்பு இரண்டும்.
12 தேற்றப் பரிசுகள்: ஒவ்வொன்றும் 50 ரூபா பெறுமதி உள்ளன.
1-ம் சித்திரக் குள்ளர் தொடங்கி 7-ம் சித்திரக் குள்ளர்வரை, உள்ள சித்திரக் குள்ளர் படங்களைக் கொண்ட தொகுதி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு டயா ஷேட் அல்லது ஒரு சாரிப் புடவை உங்களுக்குப் பரிசாகக் கிடைக்கும். விரும்பியதை (நீங்கள் தெரிந்தெடுக்கலாம்). ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு பரிசு கிடைக்கும்.
1-ம் சித்திரக் குள்ளர் தொடங்கி 7-ம் சித்திரக் குள்ளர்வரை, உள்ள சித்திரக் குள்ளர் படங்களுடன் ஸ்னோ-வைட் இளவரசியின் படத்தையும் கொண்ட ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு சிங்கர் தையற் பொறி உங்களுக்குக் கிடைக்கும். ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு பரிசு கிடைக்கும்.




மாதந்தோறும், 7-ம் சித்திரக் குள்ளர் தொடங்கி 6-ம் சித்திரக் வரையுள்ள சித்திரக் குள்ளர்கள், மேலதிகமான பின்வரும் பரிசுகளை உங்களுக்குப் பெற்றளிப்பார்கள்.-ஒவ்வொரு மாதமும் கிடைக்கப்பெறும் மிகத் துப்பரவான பிரவேசப் பத்திரத்தினை அனுப்பிவைப்பவர்களுக்கு (ஸ்னோ-வைட் விடுகதை)
1-ம் பரிசு: 250 ரூபா. 2-ம் பரிசு: 100 ரூபா.
5 தேற்றப் பரிசுகள்: ஒவ்வொன்றும், பி. சி. சி. பரிசுக் குவைப்பெட்டி ஒவ்வொன்று.
மாதந்தோறும் ஆகக் கூடிய பிரவேசப் பத்திரங்களை, ஸ்னோ-வைட் மேலுறைகளுடன் அனுப்பி வைப்பவர்களுக்கு
(ஒரே கடித உறையினுள் வைத்து அனுப்பப்படவேண்டும்).
1-ம் பரிசு: 750 ரூபா. 3 தேற்றப் பரிசுகள்: ஒவ்வொன்றும் 50 ரூபா பெருமதியுள்ளவை.

விதிகள்

1. இப்போது ஸ்னோ-வைட் விடுகதைப் போட்டியிலே பரிசு பெறுவதற்கு நீங்கள் செய்யவேண்டியது.—பின்னதாகத் தரப்பட்டிருக்கும் பிரவேசப்பத்திரத்திலே கொடுக்கப்பட்டுள்ள எளிதான வினாக்கள் இரண்டுக்கும் விடையளித்தல் வேண்டும். உங்கள் பெயரினையும் முகவரியினையும் எழுதுதல் வேண்டும். ஒவ்வொரு பிரவேசப் பத்திரத்துடனும், ஒவ்வொன்றும் வெவ்வேறான (1-ம் சித்திரக் குள்ளர் தொடங்கி 6-ம் சித்திரக் குள்ளர்வரை) - 3 சித்திரக் குள்ளர்களின் படங்களைக் கொண்ட ஸ்னோ-வைட் மேலுறைகளைச் சேர்த்து "ஸ்னோ-வைட் விடுகதை, த. பெட்டி இல. 631, கொழும்பு" என்னும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையினுள் வைத்தனுப்பப்படும் ஸ்னோ-வைட் மேலுறைகளின் தொகையினை, உறையின் பின்புறத்தில் எழுதி விடுதல் வேண்டும்.
2. ஆகக் கூடிய ஸ்னோ-வைட் மேலுறைகளுக்கான பரிசுகளைப் பெறுவதற்கு, நீங்கள் அனுப்பும் ஸ்னோ-வைட் மேலுறைகளை யெல்லாம் ஒரே கடித உறையினுள் வைத்து, உங்கள் பெயர் முகவரி ஆகியவற்றையும் எழுதி, "ஸ்னோ-வைட் மேலுறைகள், த. பெட்டி இல. 631, கொழும்பு" என்னும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையினுள் வைத்தனுப்பப்படும் ஸ்னோ-வைட் மேலுறைகளின் தொகையினை, உறையின் பின்புறத்தில் எழுதிவிடுதல் வேண்டும். பிரவேசப் பத்திரங்களுக்கான முடிவு தேதி மாதந்தோறும் மாத இறுதித் தேதியாகும்.
3. துப்பரவான பிரவேசப்பத்திரங்களுக்கான பரிசுகள், மாதந்தோறும் கிடைக்கப்பெறும் பிரவேசப் பத்திரங்களிலிருந்து, துப்பரவினைமட்டும் நோக்கி, வழங்கப்படும். பிரவேசப் பத்திரங்களுக்கான முடிவு தேதி மாத இறுதித் தேதியாகும்.
4. மாபெரும் பரிசுகளுக்கான பிரவேசப் பத்திரங்கள், விடைகளின் சரிபாட்டினையும், துப்பரவினையும் நோக்கி வழங்கப்படுவனவாகும். அவற்றுக்கான முடிவு தேதி 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதியாகும்.
5. 7 சித்திரக் குள்ளர் படங்களைக் கொண்ட ஸ்னோ-வைட் மேலுறைத் தொகுதிகளும் (டயா ஷேட் அல்லது சாரிப் புடவை என நீங்களே தெரிவுசெய்தல் வேண்டும்), ஸ்னோ-வைட் இளவரசியினதும் 7 சித்திரக் குள்ளர்களதும் படங்களைக் கொண்ட ஸ்னோ-வைட் மேலுறைத் தொகுதிகளும், உங்கள் பெயர் முகவரி ஆகியவற்றுடன் பதிவுத்தபாலாக-பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்:-
ஸ்னோ-வைட் பரிசில்கள்,
ஏ. ஜே. என். செனிவிரத்ன அன்ட் சன்ஸ்,
60, ஆனந்த குமாரசுவாமி வீதி,
கொழும்பு-3.
6. ஸ்னோ-வைட் போட்டிகளில், பி. சி. சி. லிமிற்றெட் தாபனத்திலும், ஏ. ஜே. என். செனிவிரத்தின, அன்ட் சன்ஸ் தாபனத்திலும் பணிபுரியும் ஊழியர்களும் அவர்களது குடும்ப உறுப்பினரும் தவிர்ந்த இலங்கை வாழ் மக்கள் எல்லோரும் கலந்து கொள்ளலாம்.
7. நடுவர்களின் தீர்ப்பே முடிவானது. தடுதப் போக்குவரத்து எதுவும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது.
இதோ, ஸ்னோ-வைட் விடுகதைப் போட்டிக்கான பிரவேசப் பத்திரம்:-

—வெட்டுக அல்லது படி செய்க—
1. பி.சி.சி. ஸ்னோ-வைட் சோப் நறுமணங் கொண்ட பல காரியார்த்த சோப். ஸ்னோ-வைட் சோப்பினை ஒப்பனைச் சோப்பாக உபயோகிக்கிறீர்களா? (ஆம் அல்லது இல்லை) ......
2. பி.சி.சி. ஸ்னோ-வைட் மேலுறையில் அச்சிடப்பட்டுள்ள சித்திரக் குள்ளர்களுள் தாடியும் கண்ணாடியும் உடையவர் எவர்? இல. ......
பெயர் ......
முகவரி ......
......
தபால் அலுவலகம் ......

இப் பிரவேசப் பத்திரத்துடன், (1-ம் சித்திரக் குள்ளர் தொடங்கி 6-ம் சித்திரக்குள்ளர் வரை உள்ளவர்களுள்) ஒவ்வொன்றும் வெவ்வேறான 3 சித்திரக் குள்ளர்களின் படங்களைக் கொண்ட 3 ஸ்னோ-வைட் சோப் மேலுறைகளை வைத்தனுப்புதல் வேண்டும்.

வெண்மைக்கும் பிரகாசத்துக்கும் பி.சி.சி. ஸ்னோ வைட் பல காரியார்த்த சோப்பினை உபயோகியுங்கள்.



AIRS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# கருணாநிதி வருகை

தமிழ் நாட்டின் முதல்வரும் தி. மு. க. தலைவருமாகிய கலைஞர் கருணாநிதியவர்கள் ஈழத்துக்கு தாம்விரைவில் வருகைபுரிய விருப்பதாக அறிவித்திருந்த செய்தியினைக் கேட்டு குதூகலிக்காத தமிழ் உள்ளங்கள் ஈழத்தில் இல்லை எனலாம். தமிழ்நாட்டின் தந்தையும் உலகெங்கும் பரந்து வாழும் சுமார் ஆறுகோடித் தமிழர்களின் அண்ணனுமாகிய பேரறிஞர் அண்ணா அவர்களை இலங்கைக்கு அழைத்து வரவேற்பளித்து அவரது அன்பு கலந்த அறிவுரைகளை கேட்டு மகிழ்வதற்கு ஈழத் தமிழினம் கொடுத்துவைக்க தவறிவிட்டது.

அண்ணா அவர்கள் உயிருடன் இருந்த காலத்தில் அவர் இங்கு வரவும், இந்நாட்டுத் தமிழர்களுடன் மனம் விட்டு அளவளாவவும் எடுத்த முயற்சிகளையெல்லாம், இந்திய அரசும் இலங்கை அரசுமாகச் சேர்ந்து முறியடித்துவிட்டன. ஈற்றில் நிரந்தரமாகவே இங்கு வரமுடியாவராக அண்ணா அமரராகிவிட்டார். ஈழத்தமிழர்களின் ஆசையும் நிராசையாகி விட்டது.

இந்தநிலையில், அண்ணா மறைந்துபோனாலும், அண்ணாவின் இழப்பினை ஓரளவு ஈடுகட்டி— அண்ணா வழியில் தமிழ் நாட்டை ஆட்சிபுரியும் கலைஞர் கருணாநிதி இங்குவர விருப்பதாக தெரிவித்திருந்த செய்தி இந்நாட்டுத் தமிழர்களின் இதயங்களிலே தேனென இனிப்பதில் வியப்பு ஏதுமில்லை. ஆனால் கலைஞரது அறிவிப்பு தி. மு. க. பூச்சாண்டி காட்டியே அரசியல் நடத்தும் இந் நாட்டுச் சிங்கள இன வெறியர்களுக்கு தேள்கொட்டியது போலாகிவிட்டது.

எனவேதான், வரவிடாதே கருணாநிதியை; கருணாநிதி இங்குவந்தால் உரிமைக்கு போராடும்படி தமிழர்களை கிளப்பிவிட்டு விடுவார்; அதனால் தமிழ்—சிங்கள நல்லுறவு கெடும்; என்றெல்லாம் துவேஷப் பிரச்சாரம் செய்யத் தலைப்பட்டிருக்கிறார்கள். இந்த பிரச்சாரத்தின் பின்னணியில் அரசாங்கக்கட்சியிலும், எதிர்க்கட்சிகளிலும் உள்ள சிங்கள இனவெறியர்களும், பௌத்தபிக்குக்களும காணப்படுகிறார்கள்.

தம்மைத் தேசியத் தினசரிகள் என்று கூறிக்கொள்ளும் ஏரிக்கரை ஏடுகளும், சில ஆண்டுகளுக்குமுன் எம். ஜி. ஆரை இங்கு வரவழைத்து சிங்கள மக்களுக்கு காட்டி ஏராளமான நிதி திரட்டிய 'தினபதி' குருப் பத்திரிகைகளும் கலைஞர் வருகையை தடுத்து நிறுத்திவிட துடியாய்த் துடிக்கின்றன.

கலைஞர் கருணாநிதி அவர்களும், மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களும் மற்றும் தி. மு. க. தலைவர்களும், இலங்கைத் தமிழர்களுக்கும் தங்களுக்குமிடையே எவ்வித அரசியல் தொடர்பும் கிஞ்சிற்றும் கிடையாது என்று மீண்டும் மீண்டும் திட்டவட்டமாக அறிவித்த பின்னும் சிங்கள வெறியர்கள் தங்கள் துவேஷப் பிரச்சாரத்தினை நிறுத்த மறுக்கிறார்கள். இப்படி பொய்ப்பிரசாரத்தில் தொடர்ந்து ஈடுபட்டிருப்போருக்கு வெறுமனே ஓநாய் ஓநாய் என்று கத்திய சிறுவனுக்கு இறுதியில் நேர்ந்த கதியைத்தான் இங்கு நினைவூட்டவிரும்புகிறோம்.

கலைஞர் அவர்கள் இங்கு ஓர் கலாசாரத் தூதராகவே வரப்போவதாக அறிவித்துள்ளார். கலாசார தூதராக— தமிழ் மறுமலர்ச்சியின் சின்னமாக இங்கு வரவிருக்கும் கருணாநிதி அவர்கள் இங்குவந்து தமிழர்களை சிங்களவர்களுக்கு எதிராக தூண்டிவிட்டு விடுவார் என்று கூறப்படுவது படுவிஷமத்தனமானதாகும். இலங்கையைவிட சனத்தொகையாலும், பரப்பளவாலும் மிகப் பெரிய நாடாக விளங்கும் தமிழ் நாட்டை ஆளும் கலைஞர் கருணாநிதி அவர்கள் இவர்களைவிட பன்மடங்கு அரசியல் முதிர்ச்சிபெற்றவர் என்பதை இந்நாட்டிலுள்ள சிங்கள வெறிபிடித்த தலைவர்கள் உணர்ந்து கொள்வார்களாக.

கருணாநிதியின் வருகை குறித்து சிங்களத் தலைவர்கள் இவ்வளவு பதட்டப்படும் காரணம் நமக்குப்புரிகிறது: இந்நாட்டில் தமிழினத்தவருக்கு எதிராக கொடுமைகள் இழைக்கப்படுகின்றன; அநீதிகள் செய்யப்படுகின்றன; தமிழர்களை படிப்படியாகச் சிங்களவர்களாக்க சூழ்ச்சிகள் செய்யப்படுகின்றன. இந்தச் சூழ்ச்சிகளை முறியடித்து, தமிழினமே உன் தனித்துவத்தை காப்பாற்ற இறுதிமட்டும்போராடு" என்று இந்நாட்டு தமிழினத்துக்கு கலைஞர் எங்கே உஷார்கொடுத்து விடுவாரோ என்று அஞ்சுகிறார்கள் சிங்களத்தலைவர்கள்.

ஆனால் இவர்கள் ஒன்றை உணர வேண்டும். கருணாநிதி இலங்கைத் தமிழர்களின் உரிமைப்போராட்டத்தை இங்குவந்துதான் தட்டிக்கொடுக்க வேண்டுமென்பதில்லை. தமிழ் நாட்டிலிருந்தபடியே கூட அதைச் செய்யலாம்.

**இலங்கைத் தமிழர்கள் தங்கள் உரிமைகளுக்கும் சமஷ்டிக்குட்பட்ட மொழிவழித்தமிழரசு ஒன்றை நிறுவவும் போராடுவதற்கு தங்கள் சொந்த சக்தியிலேயே நம்பிக்கை வைத்திருக்கிறார்களேதவிர, கருணாநிதியிடமோ வேறு யாரிடமோ எவ்வித உதவியையும் எதிர்பார்க்கவில்லை-ஆத்மீக ஆதரவைத் தவிர. இதை சிங்கள மக்களுக்கு எவ்வித ஐயத்துக்குமிடமின்றி கூறிக்கொள்ளவிரும்புகிறோம்.**

கலைஞர் அவர்கள் கலாசார, தூதராகவே வரவிருக்கிறார். தமிழ் நாட்டுக்கும் ஈழத்தமிழகத்துக்குமிடையேயுள்ள கலாசாரத் தொடர்புகள் மிகமிகப் பழமைவாய்ந்தவை. அதை வெட்டியெறிய யாராலும் எந்தக்காலத்திலும்முடியாது. ஆகவே கலைஞர் வருகைக்கு தடைக்கல்லாக இராதீர்கள் என்று இலங்கை அரசையும் சிங்கள வெறியர்களையும் இலங்கை தமிழர்களின் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

# சிங்களம் மட்டும் சட்டத்துக்கு களம் அமைத்துக் கொடுத்தது தமிழ்காங்கிரசின் ஒத்துழைப்பே!

## யூ.என்.பி.யுடன் ஒட்டியிருந்துகொண்டே ஜீ. ஜீ. முதலைக்கண்ணீர் வடிப்பதால் தமிழினத்தை ஏமாற்ற முடியுமா?

''தமிழ் பெரும் சமூகம் அதன் வரலாற்றிலேயே என்றும் காணாத சோகமான கோரமான கொடூரமானதோடு பரிதாபமான பரிகாசமானதுமான ஒரு சோதனை காலத்தை அனுபவிக்கும் நிலை இன்று ஏற்பட்டுள்ளது. நினைத்தால் ஆறுத்துயரத்தைக் கொடுக்கும் ஒரு காரியமாகும் இது. இந்த நிலைக்குத் தமிழினம் வர யார் காரணகர்த்தா என்பதைத் தமிழினம் நன்கறியும். நடந்ததை நன்கறிந்து தமிழினம் விழிப்புடன் இருக்க வேண்டும்.''

—இவ்வாறு தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் கொழும்பில் ஓர் கூட்டத்தில் கூறியிருப்பதாக 24-11-69 தினகரன் தெரிவிக்கிறது.

தமிழினத்தின் நிலையை விளக்க திரு. பொன்னம்பலம் கஷ்டப்பட்டு அங்கொன்றும் இங்கொன்றுமாக சில தமிழ் சொற்களை பொறுக்கியெடுத்து சிலம்பம் விளையாடியிருக்கிறார்.

திரு. பொன்னம்பலம் கூறியிருப்பதுபோல் தமிழினத்துக்கு ஏற்பட்டுள்ள இழிநிலை இரவோடு இரவாக ஏற்பட்டதொன்றா? அல்ல: அல்ல;

சிங்கள ஏகாதிபத்தியம் திட்டமிட்டு கடந்த 20 ஆண்டுகளாக எடுத்துவந்த நடவடிக்கைகளால் ஏற்பட்ட பலாபலன் இது!

தமிழினத்தை கருவறுக்கும் சிங்கள ஏகாதிபத்தியத்தின் நடவடிக்கைகளுக்கு மந்திரிப் பதவிக்கும் மற்றும் சலுகைகளுக்கும் ஆசைப்பட்டு 1956க்கு முன்பு தமிழ்த் தலைவர்களாக பவனி வந்தோர் ஒத்துழைப்புக்கொடுத்ததால் ஏற்பட்ட பலன் இது!

இந்நாட்டுத் தமிழினத்தின் பலத்தில் சரி அரைவாசியாக விளங்கிய மலை நாட்டுத் தமிழர்கள் பத்து இலட்சம் பேரின் குடியுரிமை, வாக்குரிமைகளைப் பறித்திடும் கொடுமையான பிரஜாவுரிமைச் சட்டங்கள் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டு, அம்மக்கள் 'நாடற்றோர்' ஆக்கப்பட்ட நேரத்திலேயே தமிழினத்துக்கு முதலாவது வெட்டு— ஆழமான வெட்டு விழுந்தது!

சிங்கள ஆட்சி மலைநாட்டுத் தமிழருக்கு செய்த இக்கொடுமையை ஆதரித்தவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம்! இக்கொடூரமான சட்டங்களை ஆதரித்து வாக்களித்தவர் ஜீ. ஜீ பொன்னம்பலம்!

தமிழினத்துக்கு விழுந்த இந்த வெட்டிலிருந்து இரத்தம் குபீரெனப் பாய்ந்த நேரத்தில்— தமிழினம் புழுப்போலத் துடித்த நேரத்தில்- ஒத்துழைப்பு பல்லவி பாடி சிங்கள ஏகாதிபத்தியத்தின் அரவணைப்பிலே கிறங்கியிருந்தவர் திரு. பொன்னம்பலம்!

திரு. பொன்னம்பலம் இப்போது கஷ்டப்பட்டு வர்ணித்திருக்கும் ''சோகமான கோரமான கொடூரமானதோடு பரிதாபமான பரிகாசமானதுமான சோதனை 'தமிழினத்துக்கு அன்றே ஏற்பட்டு விட்டது!

திரு. பொன்னம்பலம் இன்று தெரிவித்திருப்பதை அன்றே கூறிவிட்டார் தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம்!

மலையகத் தமிழர்களை உரிமையற்றவர்களாக்கிய சிங்கள ஆட்சிபீடம் அடுத்து தமிழர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களிலேயே அவர்களை சிறுபான்மையராக்கும் சூழ்ச்சி வலையை விரித்தது!

இது தான் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமாகும். கிழக்கு மாகாணத்தில் பல்லாயிரக்கணக்கான சிங்களவர்கள் குடியேற்றப்பட்டனர்! பழந் தமிழ்க் கிராமங்கள் பல சிங்களக் கிராமங்களாக மாற்றப்பட்டன!

சிங்கள ஏகாதிபத்தியத்தின இச்சதித் திட்டத்துக்கு உடந்தையாக இருந்தவர் திரு. பொன்னம்பலம்! இதன் காரணமாக தனித் தமிழ்ப் பிரதேசம் என்று மார்தட்டிச் சொல்ல முடியாத நிலை இன்று கிழக்கிலங்கைக்கு ஏற்பட்டு விட்டது.

இது தமிழினத்துக்கு விழுந்த அடுத்த வெட்டு!

மூன்றாவதாக தமிழினத்துக்கு விழுந்த எழ முடியாத பெரிய வெட்டு சிங்களம் மட்டும் சட்டமாகும்! மலையகத் தமிழர்களது வாக்குரிமைகள் பறிக்கப்படாமல் இருந்திருந்தால்— மலையகத்திலிருந்து வரும் தமிழ்ப் பிரதிநிதிகளின் ஒத்துழைப்போடும், இடதுசாரிகக்ட்சிகளின் ஆதரவோடும் சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேறாமல் தடுத்திருக்க முடியும்!

ஆகவே சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு மூலகாரணமே தமிழ் காங்கிரஸ் தலைவரின் ஆதரவுடன் மலையகத் தமிழ் மக்களின் உரிமை பறிக்கப்பட்டது தான்!

சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்படும்நேரத்தில் தான் தமிழினம் கண் விழித்தது! தன்னை வழி நடத்தும் பொறுப்பைத் தமிழரசுக்கட்சியிடம் கையளித்தது!

1956 முதல் தமிழரசுக் கட்சி தமிழினம் தன்னிடம் கொடுத்த பொறுப்பினை அந்தரங்கசுத்தியுடன் நிறைவேற்ற உழைத்து வருகிறது!

1956க்கு முன் சிங்கள ஏகாதிபத்தியத்துடன் சேர்ந்து தமிழினத்தை ஒழித்துக்கட்டும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்த தமிழ் காங்கிரஸ்—1956க்குப் பின் சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்த்து தமிழரசுக்கட்சிநடத்தும் போராட்டங்களையும் எடுக்கும் அரசியல் நடவடிக்கைகளையும் முறியடிப்பதில் ஈடுபட்டுவருகிறது; ஐந்தாம் படையாக இயங்கிவருகிறது!

வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களக் குடியேற்றத்தை தடை செய்யவும்,



இவ்விரு மாகாணங்களில் தமிழை ஆட்சி மொழியாக்கவும்,

இவ்விருமாகாணங்களுக்கும பிரதேச சுயாட்சி வழங்கவும்,

காலஞ் சென்ற பண்டாரநாயக்காவுடன் தமிழரசுக் கட்சி 1957 ம் ஆண்டுசெய்து கொண்ட ஒப்பந்தத்தை சிதைப்பதற்கு மூர்க்கத்தனமாக பாடு பட்டது தமிழ் காங்கிரஸ்!

இதே போல 1965க்குப் பின் திருடட்லிசேனநாயகா மூலம் மாவட்ட சபைகளை நிறுவ தமிழரசுக்கட்சி எடுத்த முயற்சிகளுக்கும் தடைக்கல்லாக விளங்கியது!

தமிழரசுக்கட்சி நடாத்திய உரிமைப் போராட்டங்களின் போது—நேரடி நடவடிக்கைகளின் போது— அவற்றை முறியடிக்கும் சதிகளில் இறங்கியது தமிழ் காங்கிரஸ்!

தமிழ் பேசும் மக்களுக்கு பொதுவானதோர் தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைக்க எடுத்த முயற்சிகளுக்கும் முட்டுக்கட்டை போடுகிறது இந்த நாசகாரக் கும்பல்!

தமிழ் பேசும் மக்களிடத்திலே ஊறிப் போயிருந்த பிரதேசமத வேறுபாடுகளைகளைத் தெறிந்து தமிழினத்தைஒரேதேசிய இனமாக கட்டியெழுப்பியது தமிழரசுக் கட்சி!

மத, பிரதேசக் கூக் குரல்களை எழுப்பி தமிழினத்தின் ஐக்கியத்துக்கு இன்றுவேட்டு வைக்க முயலுகிறது தமிழ் காங்கிரஸ்!

'தமிழ் பெரும் சமூகம் அதன் வரலாற்றிலேயே என்றும் காணாத சோகமான கோரமான கொடூரமானதோடு பரிதாபமான, பரிகாசமானதுமான' நிலையில் இருப்பதாக கூறும் தமிழ் காங்கிரஸ் தலைவரை ஒன்று கேட்கவிரும்புகிறோம்- நீங்கள் கூறுவதுபோன்று தமிழினத்தின் நிலை இருந்தால்—அந்த நிலையை மாற்றியமைத்து தமிழினத்துக்கு இன்றைய அரசாங்கம் நிதி வழங்கவில்லை.

(9ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடறிந்த பகற் கொள்ளைக்காரன் "நான் களவெடுப்பதில்லை; களவு எடுப்பது பஞ்சமா பாதகங்களில் ஒன்று" என்று பிரசாரம் செய்தால் கேட்டவர்கள் எல்லோரும் கைகொட்டிச் சிரிக்க மாட்டார்களா? ஊரறிந்த பரத்தை பத்தினி வேடம் போட்டுக் கொண்டு ஏனைய பத்தினிப் பெண்டிரைப் பரத்தையர்கள் என்று திட்டினால் யார்தான் பழிக்க மாட்டார்கள்.

இந்தப் பகற்கொள்ளைக் காரனைப்போலவும் பரத்தையைப் போலவும் தினபதி எனும் பத்திரிகை ஆயிரம் இதழ்களில் - மூன்றுண்டுகளில் - தான்செய்த சாதனைகளை எடுத்துக் கூறிச் சுய விளம்பரம் செய்திருக்கின்றது. நாற்பது வருடப் பத்திரிகைகள் கூட நினைக்க முடியாத அளவு வளர்ச்சி அடைந்து விட்டேன் எனத் தினபதி தம்பட்டமடிக்கின்றது. இது வயிறு பெருத்து வெடித்து மாண்ட தவளையின் கதையைப் போன்றதே!

★ 40 வருடம் என்ன? நானூறு வருடங்களில் வேறு பத்திரிகைகள் எழுத முடியாத முழுப் பொய்யையும் பெரும் புரட்டையும் எழுதியும் தமிழரசுக் கட்சியையும் தனிப்பட்ட சிலரையும் தாக்குதற்குக் கற்பனைச் செய்திகளை அலுவலகத்தில் உருவாக்கி வெளியிட்டும் தொடர் கட்டுரைகள் எழுதியும் ஒரு மாபெரும் சாதனையைச் செய்திருக்கின்றது தினபதி. இச்சாதனை தினபதி ஆசிரியர்

## தினபதியின் 'தனிச் சாதனைகள்'

# 400 வருடத்திலும் பிற பத்திரிகைகள் செய்ய முடியாத பொய்ச் சாதனைகள்!

திரு. சிவநாயகத்தின் தனிப் பெருந் தொண்டால் மட்டுமே செய்யப்பட்டது என்பதில் சந்தேகமில்லை.

★ இலங்கையிலுள்ள தமிழ்த் தினசரிகள் ஒன்றோடொன்று முட்டி மோதுகின்றன; திட்டித் திட்டி வஞ்சம் தீர்க்கின்றது. இவற்றிடையே ஒற்றுமையை ஏற்படுத்தத் தினபதி ஆசிரியர் திரு. சிவநாயகம் தலைமையில் இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தினர் சத்தியாக்கிரகம் செய்யப்போகின்றார்களாம் திரு. சிவநாயகம் இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர். எனவே அவர் தலைமை தாங்குவது பொருத்தமானதே."

இப்படி ஒரு செய்தியை ஒரு பத்திரிகை வெளியிட்டால் பாவம்! சிவநாயகம் என்ன செய்வார்? மறுப்பார். மறுப்பை அப்பத்திரிகை வெளியிட மறுத்துவிட்டால்? தன் பொய்ச்செய்தி உண்மை என்பதற்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை உண்டாக்கி இச்செய்தியை வெளியிட்டு வெற்றிப் பிரதாபம் பேசினால்...இது பத்திரிகைத் தர்மமா? இந்த மதிரி வெற்றிப் பிரதாபங்களையே தனிச் சாதனைகள் எனத் தினபதி வெட்கம் நாணமின்றி வெளியிட்டுப் பத்திரிகை உலகுக்கே பழி தேடியுளது.

★ இல்லாத நான்கு சங்கங்கள் ஓர் அறிக்கையினை வெளியிடுகின்றன. இந்த அறிக்கை எல்லாப்பத்திரிகைகளுக்கும் அனுப்பப்படுகின்றது. இல்லாத சங்கங்களின் பொய் அறிக்கை என்று ஏனைய பத்திரிகைகள் அறிக்கையைக் குப்பைக் கூடைக்குள் இடுகின்றன. ஆனால் தினபதி மட்டும் பொய்க்கு மாலை மரியாதை செய்துவரவேற்று 'ஏற்ற முக்கியத்துவம் கொடுத்து' வெளியிட்டது. ஒரு முறையுடன் தினபதி ஆசிரியர் திருப்தியடையவில்லை இரண்டாம் முறையும் ஒரு சந்தர்ப்பத்தை உண்டாக்கி வெளியிட்டுப் பொய்யை வளர்த்தார். இது வேறெந்தப் பத்திரிகையும் செய்யாத தினபதிக்கேஉரிய தனிச் சாதனை.

★ தினபதி தனது சாதனைப் பட்டியலிலே தனித் தலையங்கம் கொடுத்து மதிப்பளிக்கப்பட்டவர் பண்டிதர் இரத்தினம் ஆவார். பண்டிதர் இரத்தினம் பாராளுமன்றத்துக்கு ஒழுங்காகப் போவதில்லை என்று வழக்கம்போல முழுப் பொய்யை எழுதி மாட்டிக் கொண்டதால் சபாநாயகரிடமும் பண்டிதர் இரத்தினத்திடமும் தினபதி ஆசிரியர் மன்னிப்புக் கேட்டார். மன்னிப்புக் கோரும் செய்தியைத் தினபதி வெளியிட்டது. ஊருக்கு உபதேசம் செய்யப் புறப்பட்ட தினபதி பொய்ச் செய்தியை வெளியிட்டதற்கு மன்னிப்புக் கேட்டோம் என்பதையும் தனித் தலையங்கம் கொடுத்து வெளியிட்டிருந்தால் ஒரு நல்ல சாதனையாக இருக்குமே!

★ பொய்ச் செய்தியை வெளியிட்டு அதை ஊர்ஜிதப் படுத்துதற்கு, அச்செய்தியை உருவாக்குதற்குக் கைகொடுத்துதவிய இரட்டை நிருபர்களின் படத்தையும் அச்செய்தியுடன்வெளியிட்ட புதுமையான தனிச் சாதனையும் தினபதிக்கே உரியது.

★ கோப்பி ஆற்றிக் கொடுத்த செய்தியைக் காவியவர் "பூனையா புலியா" என்று பொருமச் செய்த சாதனையும் தினபதி ஆசிரியருக்கே உரியது.

★ "பொய்யிலே பிற... பொய்யிலே ஓராண்டு வ... ந்து பொய்யிலே தேயும் ... பதிக்குப் பாராட்டுரை ... வதா?" எனும் கேள்... கணையால் துளைபட்டுத் ... துடிக்கும் தினபதி ஆசிரி... நிமிர்ந்து நின்று உறுதியு... கேள்வி கேட்டவரை "... கை பார்க்கின்றேன்; ஒ... துக் கட்டுகின்றேன்; மா... மரியாதை இழக்கச் ... கின்றேன்" என்று சப... போட்டு நாளும் பொழு... பொய்ச் செய்திகளை வெ... யிட்டுமுக்கறுபட்டுப் பகிர... மாக மன்னிப்புக் கேட்... தனிச் சாதனைகளுக்கூடா... சாதனை வேறுண்டா?

★ தமிழரசுக் கட்சியை ... ஒழித்துக் கட்டவும், அத... முன்னணித் தலைவர் சிலை... பழிவாங்கவும் தன் சொ... கேட்ட அரசியற் சிட... "மூளை" நவரத்தினத்தை... பாதுகாக்கவும் தேர்தல் ... ருங்க நெருங்கத் தினப... ஆசிரியர் விடும் புரட்... அவுட்டுக்களும் போடு... பொய்க்குண்டுகளும் மேலு... பல "தனிச்" சாதனைகளை... பத்திரிகை உலகிலே நி... நாட்டும்.

★ தினபதி ஈராயிரத்... ஐந்நூறாவது இதழ் வெ... யிடுமானால் திரு. சிவநாய... மும் அங்கு ஆசிரியராக இரு... பாராளும் மீண்டும் ப... புதிய ரகச் சாதனைகளி... பட்டியலைப் படிக்கும் பா... கியம் வாசகர்களுக்கு (வா... கர்கள் இருப்பின்) கிடை... கும் என்று நாம் முன் கூ... டியே சாத்திரம் கூறி வை... கின்றோம்.

# சிங்கள மக்களையும் கவருகிறார் செந்தமிழ்ச் செல்வர் இராசதுரை

சிங்களவர்கள் மத்தியிலே ஐயப்பாட்டையும் வெறுப்பினையும் தமிழரசுக் கட்சி தனது நடவடிக்கைகளின் மூலம் வளர்த்து விட்டிருப்பதாக மாற்றுக் கட்சியினர் பிரச்சாரம் செய்து வருகிறார்களல்லவா? ஆனால் இதோ ஒரு சிங்களவர், தமிழரசுக் கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான மட்டக்களப்பு பா. உ. வும் சொல்லின் செல்வருமாகிய திரு. இராசதுரை அவர்களே தனக்கு பிடித்தமான இலங்கைத் தலைவர் என்று வாஞ்சையோடு கூறுகிறார். திரு. இராசதுரையின் தேர்தல் வெற்றிக்காக அடுத்த தேர்தலில் உழைப்பதென்றும் சபதமெடுத்திருக்கிறார்.



பி. ஆர். பண்டிதரத்ன என்ற சிங்கள அன்பர் ஓர் மூடவர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். இலங்கைக்கு வந்திருந்தபோது இவருக்கு ரூபா 500 நன்கொடையாக வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

திரு. பண்டிதரத்ன தமது அறிக்கையில் கூறியிருப்பதாவது:—

'இலங்கை வாழ் தமிழ் சிங்கள மக்களிடையே நிலவும் பரஸ்பர நல்லெண்ணத்தைக் கெடுக்கவும், அவர்கள் மத்தியில் இனத்துவேஷத்தை உண்டுபண்ணி தங்களின் பாராளுமன்ற ஸ்தானங்களைக் கைப்பற்றவுமே இந்த நாட்டின் சில அரசியல் தலைவர்கள் முயன்று வருகின்றனர்; ஆர். ஜி. யும் அத்தகையவர்களைச் சேர்ந்தவரே;

'எம். ஜி. ஆர். இலங்கைக்கு வந்திருந்தபோது ... ஒரு ஏழையென்ற முறையில் தான் எனக்கு உதவிபுரிந்தார். நான் தமிழகம் சென்று, இரண்டு மாதங்கள் அங்கு தங்கி இருந்த போதும் தம் நண்பனாகவே என்னை அவர் உபசரித்தார்.

'தமிழ்ப் படங்கள் இங்கு திரையிடப்படுவதை தடை செய்வேண்டுமென்கின்றனர் சிலர். ஆனால், எத்தனையோ தமிழ்ப் படங்கள் சிங்களத்தில் தயாரிக்கப்பட்டு, திரையிடப்படுவதை ஒருவரும் எதிர்க்கவில்லை.

'அப்படி கலாசாரப் பரிமாற்றம் செய்து கொள்ளும் ஒரு சமுதாயத்தில் இப்படியான நல்ல காரியங்களைச் சுட்டிக்காட்ட ஆர். ஜி. சேனநாயக்காக்கள் உதிக்கவில்லை, மாறாக இனம், சாதி, சமயம் என்ற வேறுபாடு இல்லாமல் பணிபுரிந்து வரும் எம். ஜி. ஆர். போன்றவர்கள் நடிக்கும் படங்களையும்; கருணாநிதி போன்ற இலட்சியத் தலைவர்களையும் எதிர்ப்பது போன்ற நடவடிக்கைகளிலேயே இவர்கள் ஈடுபடுகின்றனர். இது மிகவும் வருந்தத்தக்கது'

'மட்டக்களப்பு முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் திரு. செ. இராசதுரையே எனக்குப் பிடித்த இலங்கைத் தலைவர்' என்றும் தேர்தலில் திரு. இராசதுரைக்காக வேலை செய்யப் போவதாகவும் தற்போது தோட்டப் பகுதிகளுக்குச் சென்று ... மன்றங்களை அமைத்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

## தமிழ்த் தாய் மன்றம் வேண்டுகோள்!

நாடெங்கும் சிதறிக்கிடக்கும் அரசியல் கலப்பற்ற கலாசார இயக்கங்களான தமிழ் மன்றங்களை தமிழ்த் தாய் மன்றத்துடன் இணைய வருமாறு அதன் காப்பாளர் கவிஞர் காசி ஆனந்தன் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ்த்தாய்மன்றத்துடன் இணையவிரும்பும்மன்றங்கள், அண்ணாதாசன் கொள்கை பரப்புத் துறைப் பொறுப்பாளர், தமிழ்த்தாய் மன்றம் 39 கொவிங்வூட் இடம், கொழும்பு—6 என்ற முகவரிக்கு எழுதுமாறு கோரப்படுகின்றனர்.

## கர்ப்பக் கிருகம்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கரிய பாசம் அவள் உள்ளத்தில் பயத்தையே தோற்றுவித்துக்கொண்டிருந்தது.

'கீதா'

'என்னங்க...' எழுந்து அவன் படுத்துக்கிடந்த சாய்வு—நாற்காலியருகில் சென்றாள்.

'கீதா. நான் உன் மீது வைத்திருக்கும் பாசம் தாய்மையானது. களங்கமற்றது என்றும், எப்பொழுதும் மாறாதது என்றும் தெரியும் தானே?'

'அத்தான் நான்... தங்களையே என்னுயிராக மதிக்கின்றேன்; நீங்கள் என்னைச் சாகச் சொன்னாலும் இந்த நிமிடமே செத்துவிடுகின்றேன். உங்கள்மீது நான் வைத்திருக்கும் பாசம் இந்த உலகில் வேறு எவர் மீதும் இல்லை அத்தான்.

'கீதா. நான் உன்னிடம் ஒன்று கேட்கப்போகின்றேன், உண்மையைச் சொல்ல வேண்டும்.

'கேளுங்கள் அத்தான்'

'நீ குழந்தையை விரும்பவில்லையா?'

'குழந்தையை விரும்பவில்லையா? யார் உங்களிடம் அப்படிச் சொன்னதாம்?'

'அப்படி என்றால் குழந்தைகளைவிட உன் உடல் வனப்பை அதிகம் விரும்புகின்றாய், இல்லையா?'

'இது என்ன கேள்வி அத்தான்.'

'அப்படியானால் அளவுக்கு அதிகமான கருத்தடை வில்லைகளை நீ ஏன் பாவித்தாய்'?

'அத்தான்' என்றவளால் மேற்கொண்டு எதுவும் பேசத் தோன்றாமல் விழிகளில் நீர்மல்க அவனையே பார்த்துக்கொண்டு நின்றாள்.

வளரும்

## ஈழத்து வாசகர் கடமை!

ஈழத்தில் இலக்கிய சஞ்சிகைகள் நிலை பெற முடியாமற் போனதற்குக் காரணம் ஈழத்து வாசகர்களுடைய முழு ஆதரவும் அவற்றுக்குக் கிடையாதது தான். ஈழத்துச் சஞ்சிகைகளையும், நூல்களையும் ஈழத்து வாசகர்களே புறக்கணித்தால் ஈழத்தில் இலக்கியம் வளர்வது எப்படி? ஈழத்துச் சஞ்சிகைகளை தமிழகத்திலிருந்து இறக்குமதியாகும் கவர்ச்சிப் பத்திரிகைகளுடன் ஒப்பிட்டு நோக்காமல, அவை ஈழத்தில் உருவானவை என்ற ஒரே காரணத்துக்காக- அவை ஈழத்துப் படைப்புகளைத் தாங்கி வருகின்றன என்ற ஒரே காரணத்துக்காக ஈழத்து வாசகர் அவற்றை ஆதரிக்க வேண்டும்.,'

1970 ஜனவரி முதல் வெளிவரவிருக்கும் "மலர்" என்ற இலக்கிய மாத ஏட்டின் வெளியீட்டுக் குழுவில் பேசிய திரு. அன்புமணி இவ்வாறு கருத்துத் தெரிவித்தார் தொடர்ந்து பேசுகையில் அவர் கூறியதாவது:

வெளிநாட்டுச் சஞ்சிகைகள் பெரும் மூலதன வசதிகளையும், விற்பனை வசதிகளையும் கொண்டவை. பல ஆண்டுகளாக நிலைபெற்று வளர்ந்து பெருவிருட்சமாகி விட்டவை. இந்நாட்டில் உருவாகும் சஞ்சிகைகள் முளைவிடும் பயிரின் நிலையில் உள்ளவை, நீர் ஊற்றி வளர்க்க வேண்டிய நிலையில் உள்ளவை. எதற்கு ஆதரவு தேவை? வளரும் பயிருக்கு ஆதரவு கொடுத்தால், காலக்கிரமத்தில் அதுவும் பெருவிருட்சமாகி வளர்ந்து விட முடியும். ஈழத்து வாசகர் இதை மனதில் கொண்டு தேசிய உணர்வுடன் எமது சஞ்சிகைகளை நோக்க வேண்டும். முழு ஆதரவு கொடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தமிழ் என்று பேசக் கூடா[து]
# கோபிப்பராம் - ஜீ. ஜீ. கூறுகிறா[ர்]
# இவரும் ஒரு 'தமிழ்' த...

அன்புள்ள நண்பா,

'செமமுற வேண்டுமெனில்
திசையெல்லாம் தமிழ் முழக்கம்
செழிக்கச் செய்வீர்'

என்று முழங்கிச் சென்ருன் மீசை முறுக்கி வந்த பைந்தமிழ்க் கவிஞன் பாரதி.

''தமிழென்று தோள்தட்டி ஆடு-நல்ல
தமிழ்வெல்க வெல்கவென்றே
தினம்பாடு''

'மங்கையொருத்தி தரும் சுகமும்
எம் மாத்தமிழுக்கு ஈடாகுமா!'

'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'

'தமிழுக்கு பகைவர் தமிழர்க்கும்
பகைவரே!'

'தமிழைப் பழித்தவனை என்தாய்
தடுத்தாலும் விடேன்'

என்பன போன்ற எண்ணற்ற எழுச்சியூட்டும் கவிதைகளை உணர்ச்சித்தியிலே தோய்த்தெடுத்து தந்திருக்கிருர் புதுவை தந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

'என் தமிழை அழிப்பாரை
துண்டாகவெட்டி துகளாக்கி
உரமாக்கி
வண்டாடும் பூமலரவைப்பேன்'

என வீராவேசம் கொண்டு அன்றொருநாள் பாடினுர் கவிஞர் கண்ணதாசன்.

நம்முடைய ஈழம் தந்திட்ட உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனே குருதியில் குடேற்றி தமிழுக்காக எதையும் இழந்திடத் தூண்டும் எண்ணற்ற கவிதை மலர்களை பாடித்தந்திருக்கிருர்!

'இருந்தமிழே உன்னுல் இருந்தேன்—
இமையோர்
விருந்தமிழ்து என்ருலும் வேண்டேன்'

'ஓடையிலே என்சாம்பல் ஓடும்போதும்
ஒண்தமிழே சலசலத்து ஓடவேண்டும்'

—இப்படியெல்லாம் தமிழ் தமிழ் என்று தமிழின் மீது 'வெறி' ஏற்படுத்தும் கவிதைகளை தமிழ்க் கவிஞர்கள் தந்து சென்றிருக்கிருர்கள்;

தமிழ் மொழியின் இனிமையைச் சுவைப்பதற்காக-அடுத்த பிறவியொன்று இருக்குமானுல்- நான் அப்பிறவியிலே ஒரு தமிழனுகவே பிறக்க ஆசைப்படுகிறேன் என்று மெத்த ஆர்வமுடன் கூறிச் சென்ருர் அண்ணல் காந்தி.

தமிழின் இனிமையில் மயங்கி—தமிழைக் கற்று ஆங்கிலத்தில் திருவாசகத்தை மொழிபெயர்த்திட்டார் ஜீ. யூ. போப் எனும் ஆங்கிலேயர். அதுமட்டுமா? தனது கல்லறையின்மேலே—'இங்கே ஒரு தமிழ் மாணவன் தூங்குகிருன் என்று எழுதும்படியும் கூறிவிட்டு இறந்தார் அப்பெருமகனுர்.

'தமிழர்கள் சொத்தை இழக்கத் தயாராவார்கள்; சுகத்தை இழப்பார்கள்; நாட்டைக் கூட இழப்பார்கள், ஆனுல் மொழியை மட்டும் ஒருபோதும் இழக்க ஒருப்படமாட்டார்கள்' என்று அடித்து கூறினுர்- தன் வாழ் நாள் முழுவதும் தமிழினத்தவரின் அடிமைத்தளையை அறுத்தெறியப் போராடி 'தமிழ் நாடு' பெற்றுத் தந்த பேரறிஞர் அண்ணு!

தமிழுக்கு முன்னுல் எம்உயிர் வெல்லமல்ல; தமிழுக்குற்ற ஆபத்து நீங்க எங்கள் உயிரையும் தருவோம் என்று தமிழைக் காக்க—தங்களுக்கு தாங்களே பெற்ருேல் ஊற்றித் தம்மை மாய்த்துக்கொண்டு வேறு எந்த மொழிக்காரரும் தமது தாய் மொழிக்காகச் செய்தறியாத தியாகத்தை செய்து காட்டிவர் தமிழகத்திலே சின்னச்சாமியும் அவனைத் தொடர்ந்து எட்டு வீரமறவர்களும்! மெய்சிலிர்க்க வைக்கும் இத்தியாகத்தை செய்யும்படி அவர்களைத் தூண்டியதே தமிழ் தந்த உணர்வன்ருே?

அண்மையில் டெல்லிப் பாராளுமன்றத்திலே செங்கரும்புத் தமிழில் தி. மு. க. உறுப்பினர் பேசியதுகேட்டு, 'ஆகா தமிழ் எவ்வளவு இனிமையானதோர் மொழி' என்று இந்தி வெறியர் ஒருவரே வாய்விட்டுப் பாராட்டியிருப்பதை ஏடுகளில் படித்திருப்பாய்!

உலகில் இதுபோல் வேறு எந்த மொழிக்காரர்களும் தமது தாய்மொழியை ஆராய்ந்திட— இது போன்றதோர் மாநாட்டைக் கூட்டியதில்லை- என்னும்படி தமிழ் நாட்டிலே கூட்டப்பட்ட உலகத் தமிழ் மாநாட்டில் இலட்சக்கணக்கான தமிழர்களை- தமிழர்கள் மட்டுமன்றி தமிழ்மொழி மீது தளராதகாதல் கொண்டவர்களை- ஒன்ருகப் பிணைத்திட்ட சக்தி வாய்ந்த தமிழ் மொழியின் தலைமை குறித்து- தமிழின் வளமை குறித்து- ஆற்றல் குறித்து- பேசிடாதவரே அங்கிலத்தில் இல்லை— ஊமைகளைத் தவிர!

ஏன் நண்பா இதெல்லாம்- எனக்கு இவையெல்லாம் தெரியாதவையா? தமிழ்மொழியின் பெருமைகளை இன்று நீ திடீரென்று எடுத்துக் கூறிடக்காரணமென்ன? தமிழை நான் மறந்துவிட்டேன்; தமிழ் முழக்கம் செய்வதை நிறுத்திவிட்டேன்; மாற்று மொழிக்கு அடிமையாகிவிட்டேன் என்று கருதினுயோ? ஏன் இதையெல்லாம் இப்போது கூறுகின்ருய் என்று நீ கேட்பாய்!

நண்பா, நான் இவைகளையெல்லாம் கூறிடக் காரணம் உனக்கு இதெல்லாம் தெரியாதது என்பதல்ல; நம்முடைய தமிழரசு இயக்கத்தில் நீ உன்னை இணைத்துக்கொண்டதற்கு காரணமே தமிழுணர்ச்சிதான் என்பதும், தமிழுக்கு இந்நாட்டில் மீண்டும் மணிமுடி தரித்து நாம் இழந்துவிட்ட அரசாட்சியை மீண்டும் நிலை நாட்டிடத்தான் என்பதும் எனக்குத் தெரியாததா என்ன?

இந்நாட்டிலே தமிழுக்கு ஆபத்து வந்த நேரத்தில் எல்லாம்- ''செந்தமிழுக்கு திங்கு வந்த பின்பும் இந்தத் தேகமிருந்தென்ன இலாபம்' என்று கூறிக்கொண்டு களத்தில் குதித்தவன் நீ! தமிழ் மொழிப் போராட்டத்திலீடுபட்டு கல்லடிகளை — பொலீசாரின் மிருகத்தனமான குண்டாந்தடியடிகளை யெல்லாம் ஏற்றுக்கொண்டவன் நீ! இராணுவத்தின் துப்பாக்கிமுனைக்கு உன்மார்பைக் காட்டியவன் நீ. தமிழுக்காக தனிமைச் சிறையில் வாடிய தமிழரசு இயக்கத்தவன் நீ! மனைவி மக்களை—குடும்பத்தைப்பிரிந்து—சொந்தத் தொழிலை இழந்து — மாத்தமிழுக்காக மாங்குயில் கூவிடும் பூஞ்சோலையாக சிறைச்சாலையை மாற்றிக்கொண்டவன் நீ!

நண்பா, இயக்கத் தலைவர்களின் அறைகூவல் கேட்டு தமிழன்னையின் கண்ணீரைத்துடைக்க நாம் களத்தில் குதித்த நேரத்தில் நம்மை நோக்கி சிங்கள ஏகாதிபத்தியத்தின் படைபட்டாளம் மட்டுமா பாய்ந்துவந்தது? இல்லை நண்பா இல்லை—

அதைவிடக் கூரிய வேலாக மாற்றுக் கட்சியினரின்—குறிப்பாக தமிழ் காங்கிரஸின் ஏளனப் பேச்சுக்கள்; இழிமொழிகள்; கேலிகள்; கிண்டல்கள்; இன்னும் எத்தனையோ கணைகள் நம்மை நோக்கி ஏவி விடப்பட்டன; இன்றும் ஏவி விடப்பட்டு வருகின்றன.

ஆமாம் நண்பா, வெறிபிடித்த சிங்கள ஆதிக்கத்துடன் மட்டுமல்ல; நம்

## தமிழ் என்று கூறிட அஞ்சி ந...
## 'தமிழர் ஒற்றுமை' பேசும் இவர்க[ள்]

இனத்து[ரோகிகளா]ய் இருக்கும் ஐந்தாம்படையினையும் நாம் எதிர்த்துப் போராடவேண்டியிருந்தது; இன்றும் அதே நிலைதான்!

நாம் தமிழ்மொழியை காப்பாற்றிடக் களத்தில் குதித்த நேரத்தில் — தேர்தல் களம் ஒன்றைத் தவிர போர்க்களம் என்ருல் காததூரம் ஓடும் தமிழ் காங்கிரசினர் — எட்ட நின்று மாற்ருனுடன் கைகோர்த்தபடி நம் மீது வீசிய கண்டனக் கணைகளை — போராட்டத்தினை முறியடிப்பதற்கு செய்திட்ட சதிகளை பொறுமையுடன் தாங்கிக் கொண்டாய்!

நண்பா, அதே திருக்கூட்டத்தினர் தாம், 1965ம் ஆண்டுக்குப்பின் தேசிய அரசு ஒன்றை அமைத்து அதன்மூலம் தமிழுக்கு—தமிழ்ப் பிரதேசத்துக்கு சிலபல உரிமைகளை வென்றெடுப்பதற்கு தமிழரசுக் கட்சியெடுத்த அரசியல் நடவடிக்கைகளையெல்லாம் சிங்கள இனவெறிச் சக்திகளுடன் சேர்ந்து நாசமாக்கிய சதிகாரக் கும்பல்என்பதையும் மறந்துவிடாதே!

தோழா, சுதந்திரம் என்பது கடையில் வாங்கிடும் சரக்குப் பொருளல்ல; கண்ணீராலும் செந்நீராலும் வரையப்படவேண்டிய காவியம்; தியாக ஆற்றில் மூழ்கியே எடுக்கப்படவேண்டிய முத்து; சுதந்திரப் போரில் நமது கைகளை இழந்திடலாம்; கண்களை இழந்திடலாம்; கால்களை இழந்திடலாம்; சில சமயங்களில் உயிரையும் இழந்திடலாம்; ஆனுல் சுதந்திரம் பெற வேண்டும் என்ற உணர்ச்சியை மட்டும் இழந்திடக்கூடாது. அந்த உணர்ச்சியை ஒரு இனத்துக்கு எப்பொழுதுமே தந்து கொண்டிருப்பது தாய்மொழியொன்று மட்டும்தான்!

நண்பா, தாய்மொழியை] இ...
விட்ட இனம் அழிவிலிருந்து மீள்வ...
பது ஒருபோதுமே ...டக்கமுடியா...
தாய்மொழியைப் பறி...டுத்திட்ட...
தனையோ இனங்கள் அழிந்துவிட்ட...
வரலாறு நமக்கு கூறுகிறது!

இதை உணர்ந்துதான் இந்நா...
தமிழ் மக்களிடையே, மொழியு...
சியை வளர்த்துவருகிறது தமிழ...
கட்சி! மொழியுணர்ச்சியை இழந்...
டால் தமிழினம் அடிமை நிலையை ஏ...
மன நிலைக்குள் தன்னையறியாமலே ...
ளப்பட்டுவிடும். எனவேதான் ...
மொழியின் வரலாற்றினை— தமிழ் ...
யின் வளத்தினை — இலக்கியச் செ...
மை—சேர சோழ பாண்டிய ம...
களின் வீர வரலா... — தமி...
பழித்த வடநாட்டு மன்னர்களான ...
விசயர்களின் தலையில் கண்ணகிக்குச் ...
யெடுக்க கல்லேற்றிக்கொணர்ந்த ...
செங்குட்டுவனின் சீரை—பன்வீரா...
சிங்களவர்களை சிறைசெய்து கொ...
சென்று காவிரிக்கு கல்லணை கட்டிய...
கால் பெருவளத்தானின் பெருமைய...
துட்டகமுனுவின் சூழ்ச்சியால் வீ...

எல்லாள மன்னனின் ஏற்றத்தினை—...
கிகளுடன் தன்னை எதிர்த்த பதி...
ரம் பறங்கித் தலைகளை கையில் வா...
தன்னந்தனியனுக நின்று வெட்டி ...
திய சங்கிலி மன்னனின் சாகசத்...
300 வருடங்களுக்குமுன் தமிழரசு ...
வந்த பெற்றியினை யெல்லாம் எ...
கூறி—அன்றிருந்தநிலையினையும் இன்...
அடிமை நிலையினையும் ஒப்பிட்டுக் ...
இந்நாட்டில் நமக்கென்று—நமது ...
பிரதேசத்துக்கென்று ஓர் மொழிவழி...
ழரசு அமைக்கப் படவேண்டுமென்ற ...
ணத்தினை தமிழ் மக்களின் இதயத்...
ஆழமாகப் பதியச்செய்யும் பணியி...
பட்டிருக்கிறேம்; அதில் வெற்...
பெற்றிருக்கிறேம்;

நண்பா, நம்முடைய நோக்க...
முடைய காலத்திலே நிறைவேற்...
டால் மகிழ்ச்சிதான். ஆனுல் நிறை...
முடியாமற் போனுலும் கூட—த...
தனது அரசுரிமையை மீண்டும் ...
வேண்டும் என்ற எழுச்சிக் க...
அழியவிடாது பா...காத்து, அடுத்...
முறையினரிடம் ... ஒப்படை...
நமது நோக்கமாக இ...க்கவேண்டு...

நண்பா, தமிழ் வீழ்ந்தால் ...
னம் வீழும்; தமிழ் வாழ்ந்தால் த...
வாழும். எனவே தான் தமிழ்...
யுணர்ச்சியைத் தமிழர்களிடம் ...
அணைய விடாது பாதுகாத்துக் ...
தன் மூலம் தமிழர்களின் ...
உணர்ச்சியைக் கட்டிக்காத்து ...
ழரசுக்கட்சி பாடுபட்டு வருகிறது...

எனவே அப்படிப்பட்ட ...
தினைச் சேர்ந்த உனக்கு தமிழின் ...
மை குறித்து நான் கூறவே...
என்ன?

ஆனுல் நண்பா, தமிழ்தமிழ் எ...
டுவதை ஒருவர் கடுமையாகக் ...
கிருக்கிருர் இந்த வாரம்—அவ...
ரணமானவரல்லர். பெரிய ...
மேதை; ஹேமாபசநாயக்கா பே...
களத்தலைவர்களாக இருக்குமோ...
அப்படியுமல்ல; ...மி... ...பெயர...
ழர்களுக்குப் பாடுபடுவதாகக் ...
கொண்டு அரசியல்கட்சி ஒன்ற...
பவர் இவர், யாரென்று தெரி...

சாட் சாட் திருவாளர் ஜீ. ...
ன்னம்பலம் அவர்களே இப்பொன்...

## சுதந்திரக் கோரிக்கையை கைவிட்டு
## சோறும் வேலை வசதிகளும் யாசிக்க
## சோற்று... ...ம் இளைஞர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடாதாம்-பேசினால் சிங்களவர்

# கிறார் இப்படி- த[illegible]வரா?

, தாய்மொழியை] இழந்த
ம் அழிவிலிருந்து மீள்வது என்
பாதுமே நடக்கமுடியாதது;
ியைப் பறி[illegible]காடுத்திட்ட எத்
இனங்கள் அழிந்துவிட்டதனை
மக்கு கூறுகிறது!

உணர்ந்துதான் இந்நாட்டுத்
க்களிடையே, மொழியுணர்ச்
ளர்த்துவருகிறது தமிழரசுக்
ாழியுணர்ச்சியை இழந்துவிட்
ினம் அடிமை நிலையை ஏற்கும்
குள் தன்னையறியாமலே தள்
டும். எனவேதான் தமிழ்
வரலாற்றினை— தமிழ் மொழி
தினை — இலக்கியச் செழுமை
சோழ பாண்டிய மன்னர்
வரலா[illegible]— தமிழைப்
நாட்டு மன்னர்களான கனக
ன் தலையில் கண்ணகிக்குச் சிலை
ல்லேற்றிக்கொணர்ந்த சேரன்
வனின் சிறை—பன்னீராயிரம்
களை சிறைசெய்து கொண்டு
விரிக்கு கல்லணை கட்டிய கரி
வளத்தானின் பெருமையை—
வின் சூழ்ச்சியால் விழ்ந்த

உதிர்த்திருக்கிறார்—அவரது கட்சியின் கொழுமபுக்கிளைக் கூட்டமொன்றிலே.

தமிழ் தமிழ் என்று தொடர்ந்து பேசி வந்தால் பெரும்பான்மையினத்தின் பகைமையையே சர்பாதிக்க நேரிடும்'

என்று திரு. பொன்னம்பலம் பேசியிருப்பதாக வீரகேசரி (24-11-69) இதழ் தெரிவிக்கிறது. வீரகேசரி இதழில் வெளிவந்த இப்பேச்சு தவறாக இருக்கும் என்றும் கருதிட முடியாது. ஏனெனில் 'வீரகேசரி' தமிழ் காங்கிரசை வளர்த்து விடப்பாடு படும் நாளேடுகளில் ஒன்று; பொன்னம்பலத்தின் ஒற்றுமைப் பல்லவியை ஆதரித்து ஆசிரியத் தலையங்கம் வேறு தீட்டியிருக்கிறது.

எனவே தான் நண்பா, பொன்னம்பலத்தின் பேச்சைப் படித்தவுடன் எனக்கே ஒரு 'மாதிரியாக' இருந்தது. என்னதான் இருந்தாலும், தமிழின் பெயரால் அரசியல் கட்சியொன்றினை நடத்தும் ஒருவர் பேசிடும் பேச்சா இது?

என்று கருதுகிறாரா திரு பொன்னம்பலம் என்பது தெரியவில்லை!

தமிழா, நீ தமிழைப் பற்றிப் பேசாதே; தமிழ் தமிழ் என்று தோள் தட்டி ஆடாதே; என்று இதுவரை இனவெறி பிடித்த சிங்களத் தலைவர்கள் கூட தமிழினத்துக்குக் கூறிடத் துணியாதபோது தமிழ்த் தலைவர் என்று கூறப்படுபவர் ஒருவர் தமிழ் தமிழ் என்று பேசாதே என்கின்றாரென்றால் இதற்கு நாம் யாரை நொந்திட முடியும்?

தமிழ்; தமிழ் என்று பேசினால், சிங்களவர்களின் பகைமையைச் சம்பாதிக்க நேரிடுமாம்—தனிப்பெருந் தலைவர் கூறும் காரணம் இது! தமிழ் காங்கிரசின் கொள்கையை—நோக்கத்தினை—அடிமைப் புத்தியை—இது தெளிவாக அளந்து காட்டுகிறது! சிங்கள ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகள்—கையாட்கள்—கைக்கூலிகளே தமிழ் காங்கிரஸ் வாதிகள் என்பதையும் நிலைநாட்டுகிறது இக்கூற்று!

ஆமாம் நண்பா, சிங்களவர்களின் நல்லெண்ணத்தைப் பெற்றிடுவதற்காக—பகைமையைச் சம்பாதித்திடாமலிருப்பதற்காக-'எதையும்' விட்டுக் கொடுத்திட தமிழ் காங்கிரஸ் தயாராக இருக்கிறது என்பதை திரு. பொன்னம்பலத்தின் கூற்று எடுத்துக் காட்டிவிட்டது!

நண்பா, நாம் தமிழ் தமிழ் என்று பேசிடுவது எப்படிச் சிங்களவர்களது ஆத்திரத்தினைக் கிளப்பிட முடியும்! அப்படியே கிளப்பும் என்றாலும் நாம் அதற்குப் பயந்து தமிழை மூட்டை கட்டி வைத்துவி— வேண்டுமா என்ன? தமிழை மூட்டைகட்டி வைத்திடினும், சிங்களவர்களது கோபத்தைக் கிளப்பக் கூடாதுஎன்கிறார் தமிழ் காங்கிரஸ் தலைவர்!

—இப்படி நீ இருந்தால் மட்டுமே சிங்களவர்களின் பகைமையிலிருந்து தப்பலாம்—நல்லெண்ணத்தினை பெறலாம் என்று தமிழினத்தைப் பார்த்துக் கூறுகிறது தமிழ் காங்கிரஸ்.

தமிழினத்தின் அடிமை நிலையை ஏற்றுக் கொண்டு—சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிடாமல்—சிங்களவர்களுக்கு 'நல்ல பிள்ளைகளாக' நடந்து கொண்டு அவர்கள் இடும் அற்ப சொற்ப சலுகைகளை—மன மிரங்கித் தந்திடும் சில அரசாங்க உத்தியோகங்களை ஏற்றுக் கொண்டு திருப்தியடைய வேண்டும் என்கிறது தமிழ் காங்கிரஸ். தன்மானத் தமிழினமா இதை ஏற்கும்?

நண்பா, தமிழ் தமிழ் என்று பேசுவதற்கே அஞ்சி நடுங்குபவர்கள்—தமிழ் மொழியின் உரிமையை நிலை நாட்டிடுவோம்—சம அந்தஸ்துப் பெற்றிடுவோம் என்பதெல்லாம் வெறும் ஏமாற்று வித்தைகளன்றோ? தமிழ் என்று பேசாதே என்பவர்கள் எப்படித் தமிழுக்குச் சம அந்தஸ்துக் கோரிப் போரிட முடியும்? 'சம அந்தஸ்து' என்பது தேர்தலுக்குத் தேர்தல் ஜெபிக்கப்படும் தமிழ் காங்கிரஸ் மந்திரம். மேடையில் கூறிடுவதற்கு 'ஏதாவது' வேண்டுமல்லவா?

தோழா, திரு. பொன்னம்பலத்தை ஆயுட்காலத் தலைவராகக் கொண்ட கட்சியின் பெயர் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்! இதை நம்முடைய தோழர்கள் ஆளைப்பத்திக் காங்கிரஸ் என்றுவேடிக்கையாக அழைப்பது உனக்குத் தெரியுமே!

நண்பா, காங்கிரஸ்காரர்களால், அகில இலங்கையில் கூட வேண்டாம்—குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டுவ

# அஞ்சி நடுங்குபவர்க்கு தமிழின் பெயரால் கட்சி ஒரு கேடா?

## சும் இவர்களால் தேனகத்தையும் மலையகத்தையும் அணைக்க முடிந்ததா?

ன்னனின் ஏற்றத்தினை—பிரங்
ன்னை எதிர்த்த பதினெழாயி
் தலைகளை கையில் வாளுடன்
யனை நின்று வெட்டி வீழ்த்
மன்னனின் சாகசத்தினை—
்களுக்குமுன் தமிழரசு நடத்தி
றியினை யெல்லாம் எடுத்துக்
ருந்தநிலையினையும் இன்றுள்ள
லயினையும் ஒப்பிட்டுக் காட்டி
நமக்கென்று—நமது தமிழ்ப்
க்கென்று ஓர் மொழிவழித்தமி
கப் படவேண்டுமென்ற எண்
மிழ் மக்களின் இதயங்களிலே
தியச் செய்யும் பணியிலே ஈடு
றும்: அதில் வெற்றியும்
ிறும்.

நம்முடைய நோக்கம் நம்
லத்திலே நிறைவேறி விட்
சிதான். ஆனால் நிறைவேற
போனாலும் கூட—தமிழினம்
மையை மீண்டும் பெற்றிட
ன்ற எழுச்சிக் கருத்தினை
பா[illegible]காத்து, அடுத்த தலை
ம் [illegible]ஒப்படைப்பதே
மாக இ[illegible]க்கவேண்டும்.

தமிழ் வீழ்ந்தால் தமிழி
மிழ் வாழ்ந்தால் தமிழினம்
வே தான் தமிழ்மொழி
் தமிழர்களிடம் என்றுமே
து பாதுகாத்துக் கொள்வ
தமிழர்களின் விடுதலை
கட்டிக்காத்து வரத்தமி
ாடுபட்டு வருகிறது!

அப்படிப்பட்ட இயக்கத்
உனக்கு தமிழின் பெரு
து நான் கூறவேண்டுமா

ா, தமிழ்தமிழ் என்றுபேசி
ர் கடுமையாகக் கண்டித்தி
ந்த வாரம்—அவர் சாதா
லர். பெரிய சட்ட
ாயசநாயக்கா போன்ற சிங்
ாக இருக்குமோ என்பாய்
[illegible]மி[illegible]பெயரால், தமி
பாடுபடுவதாகக் கூறிக்
ியல்கட்சி ஒன்றை நடத்து
ரென்று தெரிகிறதா?

திருவாளர் ஜி. ஜி. பொன்
களேஇப்பொன்மொழியை

தமிழன் என்று சொல்லடா—தலை நிமிர்ந்து நில்லடா என்று ஒரு காலத்தில் வீர முழக்கம் எழுப்பியவர்—இன்று 'வீரத்தை' களத்தே போட்டு—அரசியல் விவேகத்தை இழந்து—அடிமையிலும் அடிமையாக சிங்கள ஏகாதிபத்தியத்தின் தாசனுதாசனாகமாறி இப்படியொரு 'உபதேசத்தை' செய்யப் புறப்பட்டிருக்கிறார்! தமிழினம் முழுவதுமே வெட்கப்படவேண்டிய நிகழ்ச்சி இது!

சிங்கள மக்களுக்குக் கோபம் வந்து விடும்; ஆத்திரம் ஏற்பட்டு விடும்; ஆகையால் தமிழர்களே! தமிழ் தமிழ் என்று பேசாதீர்கள்; தமிழின் பெருமைகளை எடுத்து முழங்காதீர்கள்; தெருவெல்

**அரசியல் மடல்**

லாம் தமிழ் முழக்கம் செய்யாதீர்கள்; என்று இதோபதேசம் செய்யப் புறப்பட்டிருக்கிறார் திரு. பொன்னம்பலம்!

நண்பா, தமிழர்களின் மொழியுணர்ச்சிக்கு—தமிழர்கள் தங்கள் தாய மொழி மீது கொண்டுள்ள விசுவாசத்திற்கு—தமிழின் பெயரால் தமிழர்களிடையே கட்சி வைத்துக் கொண்டிருக்கும் திரு. பொன்னம்பலம் சவால் விட்டிருக்கிறார்!

தமிழன் தன்னுடைய மொழியின் அருமை பெருமைகளை எடுத்துக் கூறக் கூடாது! தன்னுடைய பண்டைய வீர வரலாறுகளைப் பாடக் கூடாது; தன்னுடைய தமிழ்க் கலையின் சிறப்புக்களை விதந்தோதக் கூடாது—தன்னுடைய மொழிக்கு உரிமை கோரக் கூடாது—இது தான் பொன்னம்பலம் வெளியிட்டுள்ள கருத்தில் தொக்கி நிற்கும் சித்தாந்தம்.

தோழா, தமிழன், தமிழ் தமிழ் என்று பேசக் கூடாது' என்றால் சிங்களம் சிங்களம் என்று சிங்களத்தின் பெருமையை[illegible]யே (அந்த மொழிக்கு அப்[illegible] பெருமையிருப்பின்) பேச வேண்டும்

தமிழர்கள் மூச்சு விடுவது கூட சிங்களவர்களுக்கு பிடிக்காது என்றால், தமிழர்கள் அவ்வளவு பேரும் மூச்சையடக்கிச் சாக வேண்டு மென்று கூறுவாரோ தமிழ் காங்கிரஸ் தலைவர்?

நாம் நமது தாயை நமது வீட்டிலிருந்து போற்றிப் புகழுகிறோம்; தாயின் பெருமைதனைப் பேசுகிறோம்: அது அயலவனுக்குப் பிடிக்கவில்லை என்பதற்காக நம்முடைய தாயை நாம் போற்றாமலிருக்க வேண்டுமா? அயலவனின் நட்பைச் சம்பாதிப்பதற்காகத் தாயை மூலைக்குள் ஒதுக்கிட வேண்டுமா? அயலவனின் தாயையே நமது தாயாக ஏற்கவும் வேண்டுமா?

அயலவனுக்கு அஞ்சி அன்னையின் பெருமையை பேசாதே என்று ஒருவன் கூறுவானானால், அவனை பேடி, கோழை, என்றுதான் உலகம் தூற்றும். திரு. பொன்னம்பலமும் அரசியல் கோழையாக மாறி தமிழினத்துக்கு 'உபதேசம்' செய்யப் புறப்பட்டிருக்கிறார். தமிழையே தனது விழியாக—தமிழையே தனது உயிர்மூச்சாக கொண்டுள்ள ஈழத்தமிழினம் பொன்னம்பலத்தின் அடிமை மோகம் கண்டு கழிவிரக்கப்படுகிறது; கைகொட்டி நகைத்திடுகிறது.

தமிழுக்கு உரிமை கேட்டு போராடாதே!

தமிழ்மொழி புறக்கணிக்கப்படுகிறது என்று கூக்குரல் எழுப்பாதே!

பாராளுமன்றத்திலும் வெளியிலும் தமிழுணர்வைக் கொறிவிடாதே!

தமிழ்ப்பகுதி, சிங்களப்பகுதி என்று நாட்டைக் கூறுபோடாதே!

தமிழ்ப் பகுதியில் சிங்களவரைக் குடியேற்றுவதை எதிர்க்காதே!

தமிழ்க்கலை, கலாசாரம் மிதிக்கப்படுவதற்கு கண்டனம் எழுப்பாதே!

தமிழ்மொழி போதனமொழியென்பதனைமாற்றி சிங்களத்தை திணித்திட வந்தாலும் போராட்டத்தில் இறங்காதே!

தமிழ்[illegible] தமிழரே ஆள வேண்டுமென்று குரல் எழுப்பாதே!

தைப் போல—வட இலங்கையில் சில தொகுதிகளுக்குள் மட்டும் தமது கட்சியை வைத்துக் கொள்ள முடிகிறதே தவிர—ஏனைய தமிழ்ப் பகுதிகளில் தமது கட்சியைப் பரப்பிட முடிகிறதா? இதுவரை நடந்த தேர்தல்களில் வென்றிடத்தான் முடிந்ததா?

தமிழர்களின் ஒற்றுமை பற்றி வாய் கிழியப் பேசும் இவர்களால், மீன்பாடும் தேனகமாம் மட்டுமா நகரில்—திருமலையில்—கிழக்கிலங்கையின் ஏனைய தொகுதிகளில் இதுவரை ஒரு தொகுதியைத் தானும் வெற்றிகொள்ள முடிந்ததா?

யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் மீது மலைநாட்டுத் தமிழர்கள் வைத்திருந்த நம்பிக்கையினை—இந்திய பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டத்தினை மந்திரிப் பதவிக்காக ஆதரித்ததன் மூலம்—நாசமாக்கினார்களே தவிர 10 இலட்சம் தமிழர்கள் வாழும் மலையகத்தைத்தம்முடன் இணைத்துக் கொள்ள முடிந்ததா?

தமிழ் காங்கிரஸ் கொள்கைகளை—அது தோன்றிய நாள் தொட்டு இன்று வரை மானம் ஒன்றே பெரிதெனமதிக்கும் மறக்குடி மக்களான கிழக்கு மாகாணத் தமிழ் மக்களும், மலையகத் தமிழ் மக்களும் துளியும் ஏற்றுக் கொள்ள மறுத்து வருகிறார்கள்—பொன்னம்பலத்தின் 39 வருட அரசியல் வாழ்வில் ஈழத்தமிழகத்தை கூறுபோட முடிந்ததே தவிர—இணைத்து வைத்திட முடியவில்லையென்பது வரலாறு காட்டும் உண்மையன்றோ?

எனவே தான் நண்பா, இவர்களது கட்சி எதற்காக இனியும் 'அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் என்ற பெயரைச் சுமந்து கொண்டு கஷ்டப்பட வேண்டும்? யாழ்ப்பாணத் தமிழ் காங்கிரஸ்' என்று புதிய பெயர் சூட்டலாமே! இன்னுமொன்று நண்பா, தமிழ் காங்கிரஸ் தலைவருக்கு தமிழ் தமிழ் என்று பேசுவது எட்டிக் காயாகக்கசக்கிறது: இப்படிப் பேசுவதால் சிங்களவர்களின் பகைமை வளருமென்று அஞ்சுகிறார். ஆகவே அவர் தமிழ் மக்களை ஏமாற்றிடுவதற்காக இனியும் தமது கட்சிக்குத் தமிழ் காங்கிரஸ் என்று பெயரை வைத்துக் கொண்டிராது 'காங்கிரஸ்' என்

(9ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோழ மன்னன் காலப் பெருமைபெற்றது காங்கேசன் துறைமுகப்!

கௌரவமிக்க தலைவரே. மாண்பு மிகு பிரதம மந்திரி அவர்களே, இங்கு கூடியிருக்கும் பெருமக்களே, இந்தத் தேசத்தின் சரித்திரத்தில் இன்று ஒரு பெரிய நாள். கனவு நனவாய் மாறிய நாள்.

காங்கேசன்துறை வருடம் முழுவதும் துறைமுகமாகப் பாவிக்க முடியாத கடலாய் இருக்கிறது. மாரிகாலத்தில் கப்பல்களைக் கொண்டு வந்து நங்கூரம் போட்டு நிற்கமுடியாத கடல். ஆனல் கோடை காலத்தில் வடிவாய்க் கப்பல்கள் வந்து சரக்குகளை இறக்க ஏற்ற வசதியான கடலுள்ள துறைமுகம்.

எத்தனையோ நூற்றுண்டுகளாக கோடை காலத்தில் துறைமுகமாய்ப் பாவிக்கப்பட்ட ஓர் இடம், இந்தக் காங்கேசன்துறை. 1914ம் ஆண்டு இந்தியாவும் இலங்கையும் றெயில் பாதையால் தொடுக்கப்பட்டபொழுது இத்துறைமுகம் ஒரு துறையாயில்லாமல் நிற்பாட்டப்பட்டது. அவ்வளவு காலமும் சோழ மன்னன் தென்னிந்தியாவை ஆண்ட காலம் தொடக்கம் எத்தனையோ நூற்றுண்டுகளாக துறைமுகமாகப்பாவிக்கப் பட்டிருந்த இத்தலம் 1914ம் ஆண்டின் பின் வெறும் முகமாக மாறிவிட்டது.

அந்த நாள் தொடக்கம் இன்று வரை இலங்கையின் வட பகுதி மக்கள் இது திருப்பி எப்போது துறைமுகமாகருமோ என்று பிரச்சினை பண்ணிக்கொண்டிருந்தார்கள். அந்த மக்களின பிரதிநிதிகள் சட்டசபையிலும் பாராளுமன்றத்திலும் இதைப் பற்றிக் கிளர்ச்சி பண்ணிக்கொண்டேயிருந்தார்கள். கட்சி பேதமின்றி எல்லோரும் இதைக்கேட்டு நின்றுர்கள்.

காங்கேசன்துறைமுகமாகயில்லாமல் இருந்தது வட இலங்கைக்கு ஒரு கண் இல்லாதது போல இருந்தது. 1914ம் ஆண்டின் பின் பலர் ஆண்டு வந்தார்கள். முதல் ஆங்கிலேயன் ஆண்டான். பின்பு இலங்கையன் ஆண்டான். இலங்கையன் ஆண்ட காலத்தில் பலர் பிரதம மந்திரிகளாயிருந்து ஆட்சி நடாத்தி வந்தார்கள். ஆறு3பர் பிரதம மந்திரிகளாக



## அபிவிருத்தி வேலைகள் துவக்க விழாவில் தமிழரசுத் தந்தை செல்வா பேச்சு!

வந்து போனர்கள். அவர்களில் இப்போது நம் மத்தியில் இருக்கும் பிரதம மந்திரியைத் தவிர வேறு ஒருவருக்கும் இந்தத் தலத்தைத் துறைமுகமாக்கும் சலாக்கியம் கொடுபடவில்லை.

காங்கேயன் துறை முகம் ஆக்குவதோ இல்லையோ என்ற பிரச்சினை நெடுங்காலம் அடி பட்டுக் கொண்டிருந்தது. பல சக்திகள் இதைத் துறைமுகமாக்காமல் விடும்படி வேலை செய்து கொண்டிருந்தன. அந்த சக்திகளையெல்லாம் மேற்கொண்டு இதைத் துறைமுகமாக்கவேண்டும் என்று தீர்புக் கொடுத்தது பிரதமமந்திரியாகிய டட்லி சேனநாயக்காவாகும். இந்தப் பிரச்சினை யாழ்ப்பாண மக்களைச் சேர்ந்தது மாத்திரமல்ல முழு இலங்கைக்கும் உடைய பிரச்சினை என்று எண்ணினர். அப்படி விரிந்த மனத்தோடு பார்த்தபடியால் தான் இந்தத் தீர்ப்பை இப்படிக் கொடுத்தார். அதற்கு எமது மனமுவந்த நன்றியைச் செலுத்துகின்றேம்.

இவர் செய்த செய்கை பழையபடி கோடை காலத்துறைமுகமாக மாத்திரம் திருப்பி அமைப்பித்தது அல்ல கோடையிலும் மாரியிலும் வருடம் முழுவதிலும் ஒரு துறைமுகமாக உண்டாக்கி வைக்கிறர். இலங்கையின் சரித்திரம் எழுதும் போது டட்லி சேனநாயக்கா காங்கேயன் துறைமுகத்தை 1969ம் ஆண்டு கட்டி வைத்தார் என்று குறிக்கப்படும்.

காங்கேயன்துறை தொகுதி மக்கள் சார்பில இந்த அபிவிருத்தித் திட்டத்தைத் திறந்து வைக்கும்படி நான் கேட்டபொழுது முழு மனதோடும் ஒத்துக் கொடுத்தார். விசேடமாக அதற்காகவே இந்த முறை யாழ்ப்பாணம் விஜயம் தந்தார். முழு இலங்கையையும் சேர்ந்த ஓர் நிகழ்ச்சி எனக் கருதினர். அதற்காகவும் எமது மனமுவந்த நன்றி கொடுக்கின்றேம்.

முதலில் இங்கே துறைமுகம் அமைக்கவேண்டும் என்று தீர்ப்புக் கொடுத்தார். இரண்டாவதாக இந்த அபிவிருத்தித் திட்டத்தைத் தொடக்கி வைப்பதற்குச் சம்மதங் கொடுத்தார். இந்த இரண்டு செய்கைக்கும் நாங்கள் எப்போதும கடமைப்பட்டவர்களாயிருப்போம். இந்த அபிவிருத்தித் திட்டத்தைத் தொடங்கி வைக்கும்படி நான் தயவாய்க் கேட்கின்றேன்.

(16.11.69 காங்கேசன் துறைமுக துவக்க விழாவில் திரு. செல்வநாயகம் ஆற்றிய உரை.)

---

திரைவிமரிசனம்:

## குலவிளக்கு

மற்றவர்களுக்கு ஒளி கொடுப்பதற்காக தன்னைத்தானே எரித்துக் கொள்ளும் மெழுகுவர்த்திபோல-தனது குடும்பத்துக்காக தன்னையே தியாகம் செய்யும் ஒரு உத்தமியின் சோகமிக்க வரலாறுதான் குலவிளக்கு.

தன்னுடைய ஆசாபாசங்களுக்கு - உணர்ச்சிகளுக்கெல்லாம் வேலியிட்டு சிறுவயதில் தாயை இழந்துவிட்ட தனது தம்பி தங்கைக்காக ஓடாகஉழைத்துபட்டினி கிடந்து அவர்களை படிக்க வைத்து — திருமணம் செய்துவைத்து — வேலையும் தேடிக்கொடுத்து இறுதியில் காசநோயில் சிக்குண்டு — யாருக்காக தன்னையே அர்ப்பணித்தாளோ அவர்களாலேயே புறக்கணிக்கப்பட்டு மரணத்தைத் தழுவிக் கொள்ளும் அந்த குலவிளக்கு கண்ணம்மா தான்!

இந்தக் கண்ணம்மா பாத்திரத்தில் தோன்றி தியாகமும் சோகமும் கலந்த நடிப்பில் தனக்கு ஒப்பாரும் மிக்காருமில்லை யென்பதை நிலைநாட்டி, நம் இதயங்களை அழவைக்கிறர்சரோஜாதேவி. தனக்கு வரும் பழிச் சொற்களைத் தாங்கிக்கொண்டு, ஆசைகளை அடக்கிக்கொண்டு பொறுமையுடன் துயரங்களை அவர் சகித்துக் கொள்ளும் கட்டங்களில் அபாரமாக நடித்திருக்கிறர். டி. பி. யுடன் இவர் போராடும் இறுதிக்கட்டம் கரையாத மனத்தையும் கரைய வைக்கிறது.

ஜெமினிகணேசன், ராஜசுலோசன, ரங்கராவ், விஜயஸ்ரீ போன்ற பலரும் நடித்திருக்கும் இப்படத்தில் 'குபீர் ஹாஸ்ய' மன்னராக நாகேஷும் சச்சுவும் வருகிறர்கள்.

'பூப் பூவாப் பூத்திருக்கு' பாடல் இனிமையாக உள்ளது.

கோபாலகிருஷ்ணனின் திறமையில் உருவான 'குலவிளக்கு'— ரசிகர் மனதைவிட்டு என்றுமே நீங்காது!

—'மகேஸ்'

---

## நெறியில் சிறந்...

(11ம் பக்கத் தொடர்ச்சி)

பெண்மை என்பது கட்புலனுயதோர் அமைதியின் தன்மைதான். ஆனல் அந்தப் பெண்மைக்கு ஊறு நேரிடுமானல் அமைதியின் சின்னம் குமுறும் எரிமலையாகிவிடும். இது பெண்மைக்கே உரிய தனிச் சிறப்பு. மன்னனுக்கெதிராக நீதி கேட்கத் துணிந்த அந்த மங்கை நல்லாளின் வீரம் மாதவிக்கிருந்ததா? கணவனின் களங்கத்தைப் போக்கும் சக்தியோ அன்றிச் சந்தர்ப்பமோ அந்த மாதவிக்கில்லை. எங்கள் கண்ணகிக்குத்தான் உண்டு.

சேரன் செங்குட்டுவன், கணவன் இறந்ததும் தன்னுயிர் நீத்த கோப்பெருந்தேவியையும் இந்தக் கண்ணகியையும் ஒப்பிட்டுத் தன் துணைவியாம் சேரமாதேவியிடம் ''நன்னுதல் வியக்கும் நலத்தோர் யார்?'' எனக் கேட்டாளும். அதற்குச் சேரமாதேவி, ''காதலன் துன்பம் காணது கழிந்த மாதரோ பெருந்திருவுறுக ஆனல் எம் அகனுடைந்த இப்பத்தினிக் கடவுளைப் பரவல் வேண்டும்'' எனக் கூறுகிறுள். சேரமாதேவியின் சிந்தையாலே தெய்வமாகப்போற்றப்பட்ட கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவன் கோயில் எடுத்தான், கடல் சூழ் ஈழத்துக் கயவாகு மன்னனும் கோயில் கட்டினன். பண்டைத் தமிழகத்துப் பண்பாட்டுச் சிறப்பையெல்லாம் காணத்துடித்த மூவேந்தர் சிறப்பெல்லாம் ஒன்ருகப் பெற்றிட்ட எங்கள் அறிஞன் அண்ணாவும் சிலையெடுத்தான்.

ஆம்! கண்ணகி வெறும் பெண்ணல்ல. அவள் பெண்மைத் தெய்வம். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவள். எனவே தெய்வமாக வைக்கப்பட்டவள்.:-

எனவே மாதவி சாதாரண பெண் மட்டுமே. ஆனல் கண்ணகியோ பெண்மையின் பேரிலக்கணம், அவள் பெண் தெய்வம் இளங்கோ கூறியது போல் மண்ணகத்து மாதர்க்கணி. அந்த மங்கை நல்லாள் கண்ணகி மாதவியைவிட உயர்ந்தவள் பெண்மையில் மாண்புடைய [illegible]

---

## சிறிமா சாஸ்...

(10ம் பக்கத் தொடர்ச்சி)

கருதுகிறது. அதனல் அதை ஆதரித்தது!

ஆனல் சிறிமா — சாத்திரி ஒப்பந்தத்தில் கட்டாய நாடுகடத்தலுக்கு இடமிருக்கிறது—நவரத்தினம் சொல்வது சரிதான் என்று 'மூளைக்கு' வக்காலத்துவாங்குகிறது தமிழ்காங்கிரஸ்!

அப்படியானல்—

சிறிமா — சாத்திரி ஒப்பந்தம் தமிழர்களுக்கு கேடான தென்றல்—

தமிழ் காங்கிரஸ்காரர்களே! சிறிமா—சாத்திரி ஒப்பந்தத்தை நீங்கள் ஏன் ஆதரித்துப் பேசினீர்கள்? ஆதரித்து உங்கள் வாக்குகளைக் கொடுத்தீர்கள்! இதற்கு நேரடியாக பதில் சொல்லுங்கள்!

உங்கள் வாதப்படி கட்டாய நாடுகடத்தல் இருப்பதாக உணர்ந்து கொண்டும் சிறிமா — சாத்திரி ஒப்பந்தத்தை ஆதரித்ததால் நீங்கள் படுதுரோகிகள் அல்லவா?

சிறிமா சாத்திரி ஒப்பந்த அமுல் சட்டத்தினை நாங்கள் எங்கே ஆதரித்தோம் என்று பொய் கூறி நீங்கள் இதிலிருந்து தப்பிவிட முடியாது! உண்மையைப்புட்டுக்காட்ட 'ஹன்சார்ட்' இருக்கவேயிருக்கிறது! தேவையேற்படும்போது அதை அப்படியே வெளியிடுவோம்!

கட்டாய நாடுகடத்தலுக்கு சிறிமா சாத்திரி ஒப்பந்தத்திலிடமிருப்பதாக தமிழ் காங்கிரஸ்காரர்கள் நம்புவார்களானல் தமிழினத்தின் நலன்கருதி அவர்கள் அதை எதிர்த்து அல்லவா வாக்களித்திருக்கவேண்டும்? மாருக ஆதரித்து வாக்களித்தது ஏன்?

தமிழரசு இச்சட்டத்தை ஆதரித்தது - இதில் தமிழ் மக்களுக்கு தீமையில்லையென்று கருதியதால்! தமிழ் காங்கிரஸ் கட்சியோ தமிழ் மக்களுக்கு தீமை விளைவிக்கும் சட்டம் என்பதை உணர்ந்துகொண்டே சிறிமா சாத்திரி ஒப்பந்தத்தை ஆதரித்திருக்கிறது என்பது இப்போது அவர்களது வாயிலிருந்தே வெளிவருகிறது.

பச்சைத் துரோகிகள் யார் என்பதை தமிழினம் இப்போது அடையாளம் கண்டுகொள்ளட்டும்!

தமிழரசுக் கட்சி பிரதேச சபைக்கு பண்டாவின் காலிலும் மாவட்ட சபைக்கு டட்லியின் காலிலும் மண்டியிட்டதாக எழுதியிருக்கிறது தமிழ் காங்கிரஸ் ஏடு!

இதை உண்மை என்றே வைத்துக்கொண்டாலும் — தமிழரசுக்கட்சி மண்டியிட்டது பிரதேச சபைக்கு— தமிழர்களின் உரிமையைப் பெறுவதற்கு! ஆனல் திரு. பொன்னம்பலமோ தனக்கு மந்திரிபதவி பெறுவதற்காக டி.எஸ்.காலில்மண்டியிட்டாரென்ற உண்மையை தமிழ் மக்கள் மறந்திருக்கமாட்டார்களே!

''எண்ணற்ற தியாகிகளை, கட்சியை கட்டி வளர்த்த கர்ம வீரர்களை''யெல்லாம் தமிழரசுக் கட்சி வெளியேற்றிவிட்டதாக முதலைக் கண்ணீர் வடிக்கிறது காங்கிரஸ் ஏடு!

இதன்மூலம்—எண்ணற்ற தியாகிகளை உருவாக்கியது தமிழரசுக்கட்சி—எண்ணற்ற தியாகங்களை இனத்துக்காக செய்தது தமிழரசுக் கட்சி— எண்ணற்ற 'கர்ம' வீரர்களை உருவாக்கியது தமிழரசுக் கட்சி என்பதையெல்லாம தமிழ் காங்கிரஸ் ஏற்றுக் கொண்டுவிட்டது!

தியாகிகள் என்ருலும்சரி வேறு யாரென்ருலும் சரி, கட்சியின் கட்டுப்பாட்டை மீறிஞல் அவருக்கு மீண்டும கட்சிக்குள் இடமில்லை! மூன்று தடவை மன்னித்துப் பார்த்துவிட்டே எவரையும் தமிழரசுக்கட்சி வெளியேற்றியிருக்கிறது!

கட்சிக் கட்டுப்பாடு பற்றி தமிழ் காங்கிரசுக்கு என்ன தெரியும்? அவர்களுக்கு கடமை கண்ணியம், கட்டுபபாடு—மூன்றும்கிடையாதே!

தமிழ்காங்கிரசுக்கு கட்சி கட்டுப்பாடு இருந்திருந்தால் - 1960ம் ஆண்டுத் தேர்தல் முடிந்தவுடன் நடுநிலைமை வகிக்கவேண்டுமென்று தலைவர் அறிக்கைவிட உடுப்பிட்டி சிவசிதம்பரம் தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்து யூ. என். பி.யை வீழ்த்தியிருப்பாரா?

மந்திரி பதவிக்காக பேரம் பேசி தமிழினத்தை பிளவுபடுத்தி — மலைநாட்டுத் தமிழர்கள் யாழ்ப்பாணத் தமிழர்கள் மீது வைத்திருந்த நம்பிக்கையை நாசமாக்கிய தமிழ் காங்கிரஸ்காரர்கள் இன்று தமிழரசு மீது குற்றம் சாட்ட விரலை நீட்டுவார்களானல் அவ்விரலை துண்டு போடத் தமிழினம் தயாராகிவிட்டது!

துரோகிகளே! தூரவிலகுங்கள்! பொய்மூட்டைகளை நிறுத்துங்கள்! இன்றேல் தூள் தூளாவீர்கள் விரைவில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தமிழ் என்று பேசக்....

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

பதை மட்டும் வைத்துக் கொண்டு 'தமிழை' அகற்றிவிட முன்வருவாரா? அல்லது தனது கட்சியையே கலைத்து விட்டு ''தேசிய ஒற்றுமை'' கருதி யூ. என்: பி.யுடன் சங்கமமாகி விடுவாரா?

நண்பா, தமிழ் இளைஞர்கள் மத்தியிலே இன்றையதினம் ஏற்பட்டிருக்கும் வேலையில்லாப் பிரச்சினையைக் கிளறிவிட்டு—பார், பார், தமிழரசுக் கட்சி சிங்கள ஆட்சியுடன் ஒத்துழைக்காது உரிமைப்போராட்டங்கள் நடத்தியதால் வந்தவினை இது; நாம் சென்றால் சிங்களவர்களுடன் ஒத்துழைத்து வேலையில்லாப் பிரச்சினைக்கு தீர்வுகாண்போம்; என்று புதியதோர் பிரசாரத்தினை இளைஞர்களை மயக்கிடும் நோக்குடன் தமிழ் காங்கிரசு செய்து வருகிறது. இதை முறியடித்து இளைஞர்கள் மத்தியில் உண்மைதனை எடுத்துச் சொல்லிடல் உன்போன்றோரின் கடனாகும்.

தோழா, வேலையில்லாப் பிரச்சினை தமிழ் மக்களுக்கு மட்டுமேயுரிய பிரச்சினையல்ல—நாட்டுக்கே பொதுவானதோர் பிரச்சினை. இப்பிரச்சினை ஆளும் இனமான சிங்கள மக்கள் மத்தியிலேயே இன்னும் தீர்க்கப்படக் கூடியதான திட்டங்கள் எதுவும் இல்லை! இந்நிலையில் ஆளப்படும் இனமான தமிழினத்திற்கு வேலைவசதிகள் செய்துதர சிங்கள ஆட்சி முன்வரும் என்று எதிர்பார்ப்பது முட்டாள் தனமாகும்!

சிங்களவர்களுடன் ஒத்துழைத்தால் வேலைவாய்ப்புக்கள் கிடைத்திடலாமென்று கூறினால்-1965ம் ஆண்டிலிருந்து 1969 வரை நான்கு ஆண்டுகள் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் அனைவருமே ஆட்சிக்கு ஒத்துழைப்புக் கொடுத்துப்பார்த்தார்களே தமிழினத்தின் வேலையில்லாப் பிரச்சினைக்கு அப்போது தீர்வுகாண முடிந்ததா?

நண்பா, அற்ப சொற்ப உத்தியோக சலுகைகளுக்காக — வேலைவசதிக்காக — தமிழினத்தின் உரிமைப் போராட்டத்தினை—விடுதலைக் கிளர்ச்சியை கைவிட்டு சிங்கள இனத்திடம் பரிபூரணசரணாகதி அடைய வேண்டும் என்று தமிழ் காங்கிரஸ் கூறுவதை தன்மானமிக்க இளைஞர் கூட்டம் காதில் வாங்குமா? ஆளும் இனம், ஆளப்படும் இனத்தின் உரிமைப் போராட்டத்தினை-விடுதலைக்கிளர்ச்சியை நசுக்குவதற்கு—உரிமைக்குப் போராடும் இனத்தினருக்கு வேலைவாய்ப்புக்கள், உத்தியோக சலுகைகள் முதலியன வற்றை வழங்க மறுப்பது ஒன்றும் புதிதல்ல—

நண்பா, அயர்லாந்து மக்கள் சுதந்திரத்திற்காக 300 ஆண்டுக்காலம் தொடர்ந்து போராடினர்; எனின் போராட்ட காலத்தில் அம்மக்கள் சோறுவேண்டும்; வேலை வேண்டும் என்று ஆதிக்கக்காரர்களிடம் மண்டியிட்டது கிடையாது. மாறாக நமது ஐரிஷ்மொழி ஆட்சிமொழியாக வேண்டும்: ஐரிஷ் நாடு சுதந்திரமடைய வேண்டும் என்றே கேட்டனர். அந்த ஐரிஷ் மக்களின் சுதந்திரதாகத்துக்கு குறைந்ததா நமது இளைஞர்களின் உரிமை வேட்கை?

பல இலட்சம்பேரை பலிகொடுத்தும்-பல்லாயிரக்கணக்கானோர் பட்டினியால் செத்தும் சுதந்திரத்துக்கு அயராது போராடும் பயாபரா மக்களின் எழுச்சியில் நான்கில் ஒருபங்காவது நமது மக்களுக்குகிடையாதா?

எனவேதான் நண்பா, வேலையில்லாப் பிரச்சினையைத் தூண்டிவிட்டு உரிமைக் கோரிக்கையை நசுக்கிவிட எண்ணும் சிங்கள ஏகாதிபத்தியத்தின் எடுபிடிகளான தமிழ் காங்கிரஸ்காரர்களின் சூழ்ச்சிகள் நிச்சயம் பலித்திடமுடியாது.

1958ம் ஆண்டு கலவரத்தின் போது வடக்கே ஓடிச்சென்ற தமிழ் மக்கள் மீண்டும் தென்னிலங்கை நோக்கியே வரவேண்டி ஏற்பட்டது; எனவே வடக்கு கிழக்கில் தமிழர் ஒதுங்கி வாழமுடியாது: சிங்களவர்களுடன் சேர்ந்தே வாழவேண்டும் என்பதும் தமிழ்காங்கிரசின் பிறிதோர்வாதமாகும்.

நண்பா, 1958ம் ஆண்டு வடக்கே ஓடிச்சென்ற தமிழ் மக்கள் மீண்டும் தெற்கே திரும்பி வரவேண்டியேற்பட்டது எதனால்? வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களுக்கு சொந்த ஆட்சி இருந்திருக்குமானால், தென்னிலங்கைக்கு அவர்கள் திரும்பி வரவேண்டியேற்பட்டிருக்குமா? வடக்கு கிழக்கு மாகாணத்தின் ஆட்சி அதிகாரம் தமிழ் பேசும் மக்களின் கையிலிருந்தால் — இவ்விருமாகாணங்களையும் பொருளாதாரத்தில் பொன்கொழிக்கும் பூமியாக்கிடமுடியும்: அத்தனைபேருக்கும் வாழ்வு கொடுத்திட முடியும்; வேலையில்லாப் பிரச்சினைக்கு கூட தீர்வு கண்டிட முடியும்! ஆனால் ஆட்சி அதிகாரம் நமது கையில் இல்லாத காரணத்தினால்தான் அகதிகளாக கப்பலேறி வடகரையில் வந்திறங்கிய நமது மக்கள் திரும்பியும் தென்னிலங்கைக்கு வரநேரிட்டது!

அதனாலேதான் நண்பா, தமிழ்பகுதியை ஆளும் அதிகாரம் தமிழ் பேசும் மக்களின் கையில் தரப்படவேண்டுமென்று கோருகிறோம்; அதற்காக பணியாற்றி வருகிறோம்.

வடக்கு கிழக்குமாகாணங்களில்தமிழ் பேசும் மக்கள் தம்மைத்தாமே ஆளும் அதேசமத்தில் இன்று இருப்பதுபோல இலங்கையடங்கிலும் பரந்து வாழும் உரிமையையும் நிலைநாட்டவே நாம் சமஷ்டி அரசியல் திட்டம் வேண்டுமென்கிறோம். சமஷ்டி ஏற்பட்டால் வடக்கு, கிழக்குக்குள் முடங்கிட வேண்டுமென்பது அரசியல் அறியாதோர் கூற்றாகும்:

தமிழர் வடக்கே முடங்கிவாழ்ந்திடக் கூடாது; இலங்கையடங்கிலும் பரந்து வாழவேண்டும்; என்று கூறும் தமிழ் காங்கிரசினர் எதற்காக தங்கள் இந்துப் பல்கலைக் கழகத்தினை வடக்கே நிலைநாட்டிட வேண்டுமென்று ஒற்றைக்காலில் நிற்கிறார்கள்? இந்து பல்கலைக் கழகத்தினை காலியிலோ, மாத்தறையிலோ நிறுவலாமே! ஏனென்றால் இலங்கையடங்கிலும் தமிழர்களுக்கு உரிமையிருக்கிறதல்லவா?

'தேசிய ஒற்றுமை' பேசும் தமிழ் காங்கிரஸ் தலைவர், முடியுமானால், தென்னிலங்கையில் ஒரு தொகுதியில் போட்டியிட்டு வென்றுகாட்டலாமே!

நண்பா, இப்போலிவேடதாரிகளை அம்பலப்படுத்தி-தமிழினத்தின் உரிமைப் போராட்டம் தளர்வின்றிச் செல்ல மக்களைத்தயார் செய்திடுவோம்! புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கூறியதுபோல,

தமிழறியான் தமிழர் நிலை
தமிழர் நெறி தமிழர்களின்
தேவை வாழ்வு
தமையறிதல் உண்டோ எந்
நாளுமில்லை; தமிழறியான்
சுவையேகாணான்!
தீங்கற்ற தமிழறியான்
செந்தமிழ் நாட்டலுவலின்மேற்
செல்லலாமோ?

ஆகாது, நண்பா ஆகாது; தமிழ் என்றால் எட்டிக்காயாக கசக்கும் தலைவர்களுக்கு— கட்சிகளுக்கு இனியும் தமிழர் மத்தியில் இடமளிக்கவே கூடாது;

உன்
அன்புத் தோழன்,
—'கோவை'

## தமிழ் பல்கலைக் கழகத்தை ஆதரித்து ஆர்ப்பாட்ட ஊர்வலம்!

திருகோணமலையில் தமிழ்ப்பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து ஆர்ப்பாட்ட ஊர்வலம், பொதுக்கூட்டம் போன்றவற்றை நடத்துவதென திருமலையிலுள்ள மாணவ மன்றங்கள், தமிழ் இளைஞர் இயக்கங்கள், மற்றும் பொது நல மன்றங்களின் மாநாடு ஒன்றில் முடிவு செய்யப்பட்டுள்ளது:

கோணைநகர் தமிழ் ஊழி இயக்கம் ஏற்பாடுசெய்திருந்த இம்மாநாடு அண்மையில் திருமலை நகர மண்டபத்தில் நடைபெற்றது. இம்மாநாட்டில் திரு. செ. நவசோதிராசா. வீர. சுப்பிரமணியம், காளேஸ்வரன், சிவா. ஜெகநாதன், தில்லை. முகிலன், ஆகியோர் உரையாற்றினர்.

## தமிழரசு கிளை செயலாளர் போட்டியின்றி தெரிவு

காங்கேசன்துறைப் பட்டின சபையின் 3ம்வட்டாரத் (மாவிட்டபுரத்தின் ஒரு பகுதியை உள்ளடக்கியது) தில், காங்கேசன்துறைத் தமிழரசுக்கட்சிக் கிளையின் செயலாளரும் கட்சிப் பொதுச்சபை உறுப்பினருமான திரு இ. குருசாமி அவர்கள் போட்டியின்றித்தெரிவுசெய்யப்பட்டுள்ளார். ஏனைய (ஐந்து) வட்டாரங்களிலும் தமிழரசு ஆதரவாளர்களே வெற்றி பெறும் வாய்ப்புப் பெற்றுள்ளனர்:

## எட்டியாந்தோ ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்களை திருப்திப்படுத்துவதற்காக, வடக்கு, கிழக்கு, மலையகப் பகுதிகளில் சிங்களவர்களைக் குடியேற்ற அரசாங்கம் தயங்குகின்றது. சிங்களவர்கள் இப்பகுதிகளில் குடியேற்றப்பட்டால், தமிழர்கள் சிறுபான்மையினராகி விடுவார் என்று தமிழ்த் தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அவர்களை அதிருப்திப்படுத்த அரசு விரும்பாததால், அவர்களது கோரிக்கைகளுக்கு இறங்கிவிட்டது. யாழ்ப்பாணமும் சிங்களவர்களின் பிரதேசமே. அங்கும், அவர்கள் குடியேற்றப்பட வேண்டும்:

'உத்தியோகமொழி சிங்களம் என்று கூறப்பட்டாலும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசாங்க திணைக்களங்களும் உள்ளூராட்சி மன்றங்களும் தமிழிலேயே நடைபெறுகின்றன. இந்நிலை நீடித்தால் நாட்டில் சிங்களம் அழிந்துவிடும்; மாறாக, தமிழ்மொழி நாட்டின் உத்யோக மொழியாகிவிடும்'

## 274வது சுவீப் முடிவுகள்

இம்மாதம்27ந்திகதி வியாழக்கிழமை கொள்ளுப்பிட்டியில் இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 274 வது சுவீப் முடிவுகள் வருமாறு:—

முதல் பரிசு—
ரூபா 100,000
36 T 0208

2 வது பரிசு—
ரூபா 40,000
30 D 0429

3 வது பரிசு—
ரூபா 10,000
08 S 0756

ஒவ்வொன்றும்ரூ: 687-60 கொண்ட 100 ஆறுதல் பரிசுகளும் வருமாறு:—

| | |
|---|---|
| 41 A 0732 | 34 L 0074 |
| 05 A 0020 | 44 L 0757 |
| 45 A 0177 | 30 M 0659 |
| 15 A 0119 | 01 M 0354 |
| 04 A 0890 | 27 M 0599 |
| 47 B 0418 | 45 M 0099 |
| 29 B 0057 | 35 M 0247 |
| 41 B 0050 | 41 M 0194 |
| 34 B 0325 | 46 M 0142 |
| 06 C 0468 | 21 M 0515 |
| 05 C 0563 | 46 N 0448 |
| 16 D 0383 | 25 N 0491 |
| 31 D 0201 | 20 N 0561 |
| 09 D 0655 | 13 P 0802 |
| 42 D 0516 | 14 P 0060 |
| 34 E 0455 | 10 Q 0659 |
| 39 E 0437 | 05 Q 0798 |
| 32 E 0890 | 13 R 0136 |
| 21 E 0494 | 05 R 0662 |
| 22 E 0320 | 45 R 0150 |
| 18 E 0089 | 21 S 0088 |
| 37 F 0595 | 42 S 0440 |
| 13 F 0009 | 41 S 0333 |
| 13 F 0563 | 03 S 0330 |
| 08 F 0907 | 09 S 0868 |
| 16 F 0386 | 09 S 0983 |
| 09 G 0341 | 02 S 0266 |
| 30 G 4015 | 30 S 0649 |
| 05 G 0897 | 21 T 0760 |
| 12 G 0769 | 42 T 0950 |
| 35 G 0801 | 43 U 0321 |
| 06 G 0150 | 42 U 0045 |
| 32 G 0947 | 27 U 0510 |
| 18 G 0886 | 43 U 0404 |
| 38 G 0583 | 46 U 0141 |
| 47 H 0909 | 10 V 0865 |
| 11 H 0338 | 36 W 0463 |
| 13 H 0439 | 01 W 0609 |
| 47 H 0947 | 03 W 0965 |
| 06 H 0137 | 01 W 0242 |
| 06 H 0824 | 12 W 0069 |
| 08 H 0755 | 42 W 0259 |
| 13 H 0868 | 23 Y 0319 |
| 35 H 0985 | 15 Y 0781 |
| 19 J 0705 | 23 Y 0651 |
| 30 J 0067 | 16 Y 0023 |
| 35 J 0283 | 28 Z 0697 |
| 29 J 0975 | 33 Z 0672 |
| 04 K 0895 | 36 Z 0336 |
| 03 K 0551 | 18 Z 0278 |

இவை தேசிய லொத்தர் சபையால் உறுதிப்படுத்தப்படவேண்டியவை:

## சிங்களம் மட்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

யென்பது தானே அர்த்தம்! எனவே தமிழினத்துக்கு கொடுமைஇழைக்கும் அரசாங்கத்தை விட்டு இன்னும் வெளியேறாமல் ஏன் அட்டை போல ஒட்டிக் கொண்டிருக்கிறீர்கள்? தமிழினத்துக்கு கொடுமை விளைத்தாலும யூ. என். பி. ஆட்சிக்கு அடிமையாக இருப்பது தான் உங்கள் நிலை என்றால் பின் தமிழினத்தின் நிலை பற்றி முதலைக் கண்ணீர் வடிப்பது ஏன்? தமிழினத்தை மேலும் ஏமாற்றிடவா?

நாம் திட்டவட்டமாகக் கூறுகிறோம் - தமிழினத்தின் இழிநிலைக்குக் காரணங்கள் இரண்டு. ஒன்று சிங்கள மக்களை ஆளும் இனமாகவும், தமிழ் பேசும் மக்களை ஆளப்படும் இனமாகவும் மாற்றியமைத்தது - சிங்கள மக்களிடமே சகல ஆட்சியதிகாரங்களையும் திணித்துள்ள இன்றைய ஒற்றையாட்சி அரசியலமைப்புத் திட்டமாகும். மற்றது அந்த ஒற்றையாட்சித் திட்டத்துக்கு துதிபாடி, சிங்களத் தலைவர்களிடம் கையேந்தி இனத்துக்கு இழிவுசேர்க்கும் தமிழ் காங்கிரஸ் கட்சி.

சிங்கள ஏகாதிபத்தியத்தின் எடு பிடிகளான தமிழ் காங்கிரசைத் தமிழ்ப் பகுதி அரசியலிலிருந்து வேரோடு கெல்லியெறிந்துவிட்டு, தமிழரசுக் கட்சியின் தலைமையின் கீழ் தமிழினம் முழுவதும் ஒன்றுபட்டுப் போராடிச் சமஷ்டி அரசியற்திட்டத்தின் கீழ் தமிழ் பிரதேசத்துக்குச் சுயாட்சி பெற்றால் மட்டுமே தமிழினம் இந்நாட்டில் மானத்துடன் வாழ முடியும் என்று அறுதியிட்டுக் கூறி வைக்கிறோம்.

## வாழ்த்து

இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணியின் கிரிமலைக்கிளையின் தலைவரும் வடபகுதி ரெலி குமாஸ்தா சங்க ஊழியருமாகிய செல்வன் சின்னத்தம்பி சபாநாதன் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த செல்வி இராசேந்திரபூபதி சிவசம்புவை அண்மையில் திருமணம் புரிந்துகொண்டார். மணமக்கள் பல்லாண்டு வாழ்க வென வாழ்த்துகிறோம்.

—ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிமா சாத்திரி ஒப்பந்தச் சட்டத்தினை நீங்கள் ஆதரித்ததுண்டா இல்லையா?

தமிழரசுக்கட்சி கடந்த 13 ஆண்டுகளாக சாதித்ததென்ன என்ற ஒரு கேள்வியை மாலை நேரமேடைகளில் எழுப்பி விட்டு— ஏதோ தமிழரசுக்கட்சியால் பதிலளிக்க முடியாத கேள்வியொன்றை கேட்டு விட்ட தான நினைப்பில் இறுமாந்திருந்த தமிழ் காங்கிரஸ்காரர்கள், நாம் தந்த சாதனைப் பட்டியல் கண்டு கதி கலங்கிப் போய் அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டு அலறத் தொடங்கியிருக்கிறார்கள்.

வாதத்துக்கு வாதத்தை- கருத்துக்கு கருத்தை எடுத்துக்காட்டி நம்மை நேருக்கு நேர் சந்திக்க திராணியற்றவர்கள், பொய் புரட்டுக்களை இட்டுக்கட்டி- குதர்க்க வாதங்களை எழுப்பி குத்தல் மொழிகளை வீசி- கேலியும் கிண்டலும் பேசி- அழிவிலிருந்து தங்களைப் பாதுகாக்கலாமென்று கனவு காணத் தலைப்பட்டிருக்கிறார்கள்!

தமிழரசுக்கட்சியின் சாதனைபற்றி நாத்தடிப்புஏற கேள்வியெழுப்பி வந்தவர்களுக்கு கட்சியின் சில சாதனைகளை சுடச்சுட சுட்டிக்காட்டியிருந்தோம்- சில வாரங்களுக்கு முன்னர்!

புரியாத மரமண்டைகளே புரிந்துகொள்ளுங்கள் என்று அறுவுறுத்தியிருந்தோம்-

தமிழ் காங்கிரஸ் மரமண்டைகள் நமது சாதனைப் பட்டியல் பற்றி இப்போது குதர்க்கம் பேசப் புறப்பட்டிருக்கிறார்கள்.

தமிழினத்தை காட்டிக் கொடுத்து விலைபேசிவிற்று தங்கள் வயிற்றை நிரப்பி- இன்றைய அவல நிலைக்கு தள்ளிக் குழி பறித்தவர்கள்- தமிழரசுக்கட்சியின் சாதனைகள் பற்றி கிண்டல் செய்ய இன்றைய தினம் புறப்பட்டிருக்கிறார்கள்!

**எஸ்ஸாரெம்**

பொய்யிலே பிறந்து பொய்யிலே வாழும் பொய்மைக் கூட்டம் பொய்சொல்லியே தமிழ் மக்களை மேலும் மேலும் ஏமாற்றிவிடலாமென்று கருதுகிறது!

''1948-ம் ஆண்டு நேரு- சேனநாயக்கா சம்மதம் பெற்ற இலங்கை இந்திய பாகிஸ்தானியச் சட்டத்தை எதிர்த்ததன் மூலம் ஏறக்குறைய ஒரு இலட்சம் மலையக மக்களை அரசியல் உரிமைகளற்ற அநாதைகளாக்கியது சமஷ்டிக்கட்சி. திரு. பொன்னம்பலம் இதனை ஆதரித்ததை குறை கூறிவிட்டு இன்று 5½ லட்சம் மலையக மக்களை நாடற்றவராக்கும் சிறிமா- சாஸ்திரி ஒப்பந்தத்தை ஆதரித்த கட்சி சமஷ்டிக்கட்சி''

—இவ்வாறு முழுப்பொய் ஒன்றை கூறுகிறது காங்கிரசின் காளான் ஏடு!

இலங்கை இந்திய பாகிஸ்தானியச்சட்டம் என்று ஒரு சட்டம் கிடையாதென்பதையும், இந்திய பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டமே 1948-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் பெயர் என்பதையும் முதலில் இந்தக் காளான் ஏடு புரிந்து கொள்ளட்டும்!

1947ம் ஆண்டு மலைநாட்டுத் தமிழர்கள் 10 இலட்சம் பேருக்குமே இலங்கைக் குடியுரிமையிருந்திருக்கிறது. 1947ம் ஆண்டுத் தேர்தலில் தங்கள் பிரதிநிதிகளாக ஏழு பேரை அவர்கள் பாராளு

தமிழ் காங்கிரஸ் கட்சியினரின் வாதப்படி தாங்கள் ஆதரித்த அச் சட்டத்தினுல் ஏழு இலட்சம் பேருக்கு பிரஜாவுரிமை கிடைத்திருக்க வேண்டும்!

ஆனுல் நடைமுறையில் நடந்தது என்ன?

1947ம் ஆண்டுத் தேர்தலில் குடியுரிமை பெற்றிருந்த 10 இலட்சம் மலையகத் தமிழர்களும் 1952 பொதுத் தேர்தலில் அந்த உரிமையை இழந்து நாடற்றவர்களாக்கப்பட்டனர்!

இதுதான் தமிழ்காங்கிரஸ் ஆதரித்த இந்திய பாகிஸ்தானிய சட்டத்தின் பலாபலன்.

இச்சட்டத்தினை தமிழரசுக்கட்சி எதிர்த்ததால் தான் ஏழு இலட்சம் மலைநாட்டுத் தமிழர்களின் உரிமை பறிபோயிற்று என்று தமிழ் காங்கிரஸ் இன்றைக்கு கூப்பாடு போடுவது கடைந்தெடுத்த பச்சைப் பொய்யாகும்!

தமிழினத்துக்கு நஞ்சூட்டிய நாகபாம்புகள் இன்று தம்மை நல்லவர்களாக காட்ட போடும் வேடம் கண்டு நல்லவர்கள் சிரிக்கின்றனர்!

சிறிமா-சாத்திரி ஒப்பந்தச் சட்டம் 5½ இலட்சம் மலையகத் தமிழர்களை நாடற்றவர்

## தமிழ் காங்கிரசே!

## புழுகுமூட்டையை நிறுத்து!

## திராணியிருந்தால்

## இதற்குப் பதில் சொல்!!

மன்றத்திற்கு அனுப்பி வைத்தார்கள் - இந்த உண்மையை தமிழ் காங்கிரஸ்காரர்கள் மறுக்க முடியுமா?

இந்த பத்து இலட்சம் மலையகத் தமிழர்கள் அனுபவித்து வந்த குடியுரிமையைப் பறித்திடத்தான் இந்திய பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டத்தினை பெரிய சேனநாயகா கொண்டு வந்தார்.

இச் சட்டத்தினை நேருஜி ஆதரித்ததாக காங்கிரஸ் கூறுவது ஒரு கடைந்தெடுத்த பொய்யாகும்! சட்டத்தினை எதிர்த்து நேரு அனுப்பிய தந்தியினை கூட விழுங்கிவிட முயலுகிறார்கள் தமிழ் காங்கிரசினர்!

இந்தியப் பிரதமர் நேருவும், தமிழ் காங்கிரசிலிருந்து வெளியேறிய தமிழரசுத் தந்தை செல்வநாயகம், வன்னிய சிங்கம், சிவபாலன் ஆகியோருடன், இடதுசாரிச் சிங்களத் தலைவர்களும், மலையக மக்களின் பிரதிநிதிகள் ஏழு பேரும் இச் சட்டத்தினை எதிர்த்து வாக்களித்தனர்!

தமிழ் காங்கிரஸ் மட்டுமே இதை ஆதரித்தது!

அச் சட்டத்தினை தமிழரசுக் கட்சி எதிர்த்ததினுல் மட்டும் சட்டம் நிராகரிக்கப்படவில்லை!

தமிழ் காங்கிரஸ் ஆதரவுடன் சட்டம் நிறைவேற்றப்பட்டு அமுல்நடத்தப்பட்டது!

களாக்கும் என்றும் அச்சட்டத்தினை தமிழரசுக் கட்சி ஆதரித்து துரோகம் புரிந்துவிட்டதென்பதும் தமிழ் காங்கிரசின் அடுத்த பொய்யாகும்!

இந்திய பாகிஸ்தானிய சட்டத்தால் ஏற்கெனவே நாடற்றவர்களாக்கப்பட்டு கடந்த 20 ஆண்டுகளாக தவித்து கிடக்கிறார்கள் மலையகத் தமிழர்கள்! இவர்களை நாடற்றவர்களாக்குவதற்கு புதிய சட்டம் தேவையில்லை!

மலையகத் தமிழர்கள் உரிமை கேட்டுச் சத்தியாக்கிரகத்திலீடுபட்டிருந்த நேரத்தில் அந்தப் பாட்டாளி மக்களை குதிரைப்படையைக் கொண்டு மிதித்து துவம்சம் செய்த யூ. என். பி. அமைச்சரவையில் அமைச்சர் பதவியில் ஒட்டிக்கிடந்தவர் தமிழ் காங்கிரஸ் தலைவர் என்ற உண்மை சரித்திரத்திலிடம் பெற்றதாகும்!

நாடு பறிக்கப்பட்டு—உரிமையின்றித் தவிக்கும் மலைநாட்டுத் தமிழர்களில் சில இலட்சம் பேருக்காவது நாடற்றவர் என்ற நிலையை மாற்றிடுவதற்கு கொண்டுவரப்பட்டதே சிறிமா சாத்திரி ஒப்பந்த அமுல் சட்டமாகும்.

இந்தச்சட்டப்படி இஷ்டமில்லாத எந்தப் பிரஜையையும் பலவந்தமாக இந்தியாவுக்கு நாடுகடத்திவிட முடியாதென்று தமிழரசுக் கட்சி

(8ம் பக்கம் பார்க்க)

# சுட்ட பணிகாரம்

★ 5 நாடகங்கள்.
★ மலர்.
★ காலநிதி.
★ ரகுநாதன்.
★ சுமதி.

ஒரு பெரிய நாடகவிழா நடந்து முடிந்திருக்கிறது. அனுத முன்னிட்டு ஒரு நாடக மலரும் வெளி வந்திருக்கிறது நிறைய விளம்பரங்களுடன். அதில் 'நம்ம' எம்சியார், சிவாசி, சானகி, பாலாசி, ராசன், விசயா, சரோசா, புச்பலதாராசசிறீ முதலிய ஈழத்துக் கலைஞர்களின்—சாச்சாய்! மன்னிக்க வேண்டும் மறந்துபோய் எழுதிவிட்டேன் — இந்தியக் கலைஞர்களின் படங்களும் உண்டு. (ஏற்கனவே செய்யப்பட்ட புளக்குகள் தான்.)

இவர்களை எல்லாம் யாருக்கும் தெரியாதென்றுதான் 'படப் புடிச்சிப்'' போட்டார்களோ? அதுவும் ஒரு 'பிரமாண்டமான' மலரில்.

இது என்ன சேவை?

நமது கலைஞர்கள் - திறமைசாலிகள் - எத்தனையோ பேர்களிருக்க ஏன் அவர்களை அறிமுகப்படுத்தவில்லை? அவர்களிடம் கேட்டிருந்தால் தத்தமது புளக்குகளைக்கூடத் தந்து உதவியிருப்பார்கள் தான். ஆகக் குறைந்தது மேடையேற்றப்பட்ட ஐந்து நாடகக் கலைஞர்களையும், தயாரிப்பாளர்களையுமாவது அறிமுகப்படுத்தியிருக்கலாம்.

ஈழத்து நாடகமேடைகளை (கொழும்பு, யாழ்ப்பாணம், மலைநாடு, மட்டக்களப்பு, மன்னார், திருக்கோணமலை என்ற ரீதியிலும்), நாடக மன்றங்களை, நமது கலைஞர்களை, ஈழ நாடக நூல்களை, தமிழ் நாடகத் தயாரிப்பாளர்களை, பள்ளிக் கூட நாடகங்களை எல்லாம்;

அல்லது

சிங்கள நாடகங்கள்; இந்தியா-ஈழ நாடக முரண்பாடுகள் அல்லது இலங்கை- மலேசிய ஒற்றுமைகள், அது ஏன்?; சிங்கள நாடக வளர்ச்சி தமிழ் நாடகங்களைத் தாக்கினவா? யாழ்ப்பாணத் தமிழ் மேடையில் எடுபடாததன் காரணம் (இதைப் பகிரங்கமாகச் சொல்ல எல்லார்க்குமே பயம்); ஈழத்து எழுத்தாளர்கள் நாடகத் தயாரிப்பில் ஈடுபடாததன் காரணம்; அல்லது தயாரிப்பாளர்கள் எழுத்தாளர்களை நெருங்காததன் காரணம் ......... என்பனவற்றையெல் விளக்கமாகக் காணலாம் என்று பார்த்தால்...... ப்பூ! சுட்ட பணிகாரம் எண்ணெயில போடப்பட்டிருக்கிறது.

'பெரியவர்களுக்குமா' சிவாசி, எம்சி, அடிமைப் புத்தி போகவில்லை? சேச்சே!

யாரோ, எங்கோ, எதையோ செய்திருந்தால் இப்படியான விளுக்களுக்கே

**இலக்கிய உலகு**
**-''வேதாளம்''-**

இடமிருக்காது. ஆனுல் கொண்டாடியவர்கள் இப்படியான மகத்தான தவறுகளைச் செய்திருக்கவே கூடாது என்ற தார்மிக எண்ணத்தாலேயே கேட்கவேண்டியிருக்கிறது.

அவர்களாவது, அவ்வளவாவது, செய்தார்களே. என்று எவரும் முணுமுணுக்க வேண்டாம். ஏனென்றால் உள்ளூர்த் தயாரிப்புகளைக் கட்டாயம் ஊக்குவிக்க வேண்டும் என்பது அரசாங்கமே பணித்திருக்கும் ஒன்று.

செய்ததே செய்தார்கள். அந்த ஐந்து நாடகங்களையும் புத்தகங்களாகவாவது போட்டுத் தொலைத்திருக்கலாம். பெரும்பாலும் நாடகங்கள் 'சரிக்கட்டப்பட்டவை' என்பதனுல்தான் அப்படிச் செய்யவில்லையோ?

நாடகவிழாவில் பங்கு பற்றியவர்கள் அத்தனை பேரையுமே பாராட்டலாம்.

ஆனுல்...

இப்போது சில 'குசுகுசுப்பு'கள் கேட்கின்றனவே. எல்லாமே தலைகுப்புறவாமே.

வெளிவந்த நாடக முடிவுகளுக்கும் ஒருகலாநிதியின் ஜட்ஜ்மெண்டுக்கு நிறைய முரண்பாடாம்.

ஆரம்ப நாடக முடிவுகளே வேறேயாம்.

அதையறிந்த 'முதலில் ஒடக் கூடிய' ஒருவர் 'சொல்லவேண்டியவர்களிடம்' போய் அழுது பிரலாபித்து செய்ய வேண்டியதைச் செய்தாராம்.

கலை, கலை என்று உழைத்து ஒரு சினிமாவும் எடுத்துப் பிரபலமான ஒருவருக்குத் தலை 'சொறியத்' தெரியவில்லையாம். அதாவது அவர் போய் அடிபணிந்து' 'எனக்குத் தாருங்களேன்' என்று கேட்டு 'அவர்களை'' மதிக்கவில்லை என்றும் ஒரு புகார். அப்படிக் கேட்டிருந்தால்இப் போதைய முடிவும் வேருக இருந்திருக்குமோ?

பொதுவாக நாடகத்துக்கு டைரக்டர் என்ருருவரைக் கணிப்பதில்லை. டைரக்டர் என்பது சினிமாவில்தான் நாடகம் என்ருல் தயாரிப்பாளரேசிறப்பான இடம் பெறுபவர். மேலைநாடுகளிலும் இதுவே வழக்கம். நமது நாடகங்களில் யார்?— டைரக்டரா? தயாரிப்பாளரா?

முதலாம் பரிசுக்குரிய 'ஸ்கிரிப்ட்' இந்தியத் தமிழ் என்றும் சிலர் குறைப்படுகிருர்கள். மண்வாசனை' தேசியம், யதார்த்தம் என்றெல்லாம் 'பைஃற்' பண்ணுபவர்களே விட்டுக் கொடுத்த பிறகு இந்தச் 'சிலர்' எந்த மூலைக்கு?

ஆனுல் ஒன்றுமட்டும் உண்மை. அனைவரும் 'சுமதி' க்களிக்கப்பட்ட தீர்ப்பில் குறைசொல்லக்காணேம்.

பிறிதொரு சாரார் இன்னேர் 'மகத்தானமிஸ்டேக், கையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. முன்பே மேடையேற்றப்பட்டவை பங்குபற்றக் கூடாதென்பது ஒரு விதியாம்.

ஆனுல்......?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெறியில் சிறந்தவள் யார்?

## கண்ணகியா? மாதவியா?

## யாழ் அண்ணா சொற்பயிற்சி மன்றத்தில் நிகழ்ந்த சுவையான பட்டிமன்றம்

யாழ்ப்பாணம் அண்ணா சொற்பயிற்சி மன்ற மாணவர்கள் கண்ணகியா மாதவியா நெறியில் சிறந்தவள்? என்ற விடயமாக நடாத்திய சொற்போர், சிலப்பதிகார ஆய்வாக, உயரியவாதமாக அமைந்தது. இச் சொற்போருக்கு திரு. புதுமைலோலன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். கண்ணகியே நெறியில் உயர்ந்தவள் என செல்வி திலகமணி திருமால் (காங்கேசன்துறை), செல்வன் சி. ஸ்ரீகணேசன் (கோண்டாவில்), செல்வன் க. மனோகரன் (வல்வெட்டித்துறை) என்பவர்களும்; மாதவியே நெறியில் உயர்ந்தவள் என செல்வி சற்குணதேவி நடராசா (சித்தங்கேணி) செல்வன் சி. சுயமுக வரதன் (சங்கானை), திரு. செ. பொன்னுத்துரை (அரியாலை) என்பவர்களும் உரையாற்றி, அவ்வாதத்தினை நடாத்திச் சென்றனர். அந்தச் சொற்போரினை, ஆம்! கருத்துப் போரினை சுதந்திரன் வாசகர்களும் அறியட்டுமே!

கண்ணகியே நெறிமிக்கவள் என்ற பக்கம் தலைமைவகித்துப் பேசிய செல்வி திலகமணி பேசுகின்றார்;

கேளுங்கள்.........!

தலைவர் அவர்களே! நண்பர்களே! பெண்மை என்றால் பெருமை என்றார் திரு. வி. க. பெண்மையின் பெருமைதனைப் பெரும்புகழ்ப் புலவன் பெருநாவலன் வள்ளுவன் தன் அரும்புகழ்க் குறளிலே அழகாக எடுத்துக் காட்டியுள்ளான். அத்தகு பெருமைமிகு பெண்மைதனைக் கருவாக்கித் தலை சிறந்த தமிழர் தம் காப்பியமாம் சிலம்புச் செல்வத்திலே சீரிய இரு தலைவியரை எடுத்து ஈண்டு, பெண்மையிற் சிறந்தவர் யார் என்று சொற்போர் நிகழ்த்தப்படவிருக்கிறது. கண்ணகியே பெண்மையின் பெரும்பேறு, சிறப்புமிகு சேயிழையாள் எனச் செப்பி என் வாதத்தை நிலைநாட்ட நும் முன் வந்துள்ளேன்.

பெண்மைதனைப் பெருமைப்படுத்த வந்த வள்ளுவன் ''பெண்மையிற் பெருந்தக்க யாவுள?'' எனக் கேட்டு கற்பெனும் திண்மையுண்டாகப் பெற்றால் அந்தப் பெண்மையைவிடப் பெருமையுடையது வேறெதுவுமேயில்லை எனச் செப்பிவிடுகின்றான். என் வாதத்துத் தலைவியாய், கருப் பொருளாய் அமைந்துவிட்ட கண்ணகி தெய்வக் கற்பினள். பெண்மைக்குரிய பேரிலக்கணத்தைப் பெற்றுப் பெருமையுடன் திகழ்கிறாள்.

இந்த வகையிலே எனது எதிர்க்கட்சியினர் எடுத்துரைக்கவிருக்கும் மாதவிப் பெண்ணாள் கற்பிலே கண்ணகிபோல் மாட்சியுடையவளல்ல. கற்பில்லாதவள் என்று நான் கூறவரவில்லை. ஆனால் அவள் கற்புக்குக் களங்கம் கற்பிக்கப்பட்டுவிட்டது. கணவனின் சந்தேகப் பார்வைக்குட்படாத சற்குணவதி எங்கள் கண்ணகி ஆனால் ஆடல் மங்கை மாதவியோ கோவலனின் சந்தேகப் பார்வைக் குட்பட்டவளாவாள். கானல்வரிப்பாடலிலே அந்தக் குறைதனைக் காண்கிறோம்

கணவன் வேற்றவளை எண்ணிப் பாடிவிட்டான் என்றால் மனைவியும் வேறொருவனை எண்ணிப் பாடுவது போல் நடிப்பதே தவறு. ஒரு கற்புடைய மங்கை சொற்திறம்பக் கூடாது. இங்கே கோவலனுக்குப் போட்டியாக மாதவி யாழ்மீட்டிக் கானல்வரிஇசைக்கிறாள், அப்படி இசைக்கின்ற அந்த மாதவியை மனத்துக்கண் மாசுடன் நோக்கினான் கோவலன். அவளிற் தவறில்லாமல் இருக்கலாம். ஆனால் அந்தச் சிறு சந்தேகம் இருக்கிறதே அதை ஏற்படுத்திய காரணத்தால் மாதவி குறையுடையவளே. அவளைவிட இவ்விடத்தில் கண்ணகி உயர்ந்து தோன்றுகிறாள்.

கண்ணகி மனைத்தக்க மாண்புடையவளாகி இல்லறம் இனிதே நடத்துகின்றாள். மாசறு பொன்னாய், வலம்புரி முத்தாய், காசறுவிரையாய், கரும்பாய்த் தேனாய் கண்ணகி இனிக்கின்றாள் கோவலனுக்கு. எனவே அவர்கள் இல்வாழ்வில் இன்பத் தேனாறு ஓடியது என்பது உறுதி. இந்த வகையிலும் கண்ணகி ஒரு உயர்ந்த வாழ்க்கைத் துணை நலமாய் விளங்கியிருப்பது ஒரு தலை,

ஆனால் கோவலன் கண்ணகியை விட்டுப்பிரிந்து மாதவி மாட்டுச் செல்கிறான். இவ்விடத்தில் கண்ணகியைக் குறைத்து மதிப்பிட எதிர்க்கட்சியினர் முயலலாம். அவள் ஒரு தகுந்த துணைவியாய் இருந்து இல்லற இன்பத்தை ஈயவில்லை என்று இயம்ப முற்படுவர். உண்மையிலே கண்ணகியிடம் இன்பம் காணாது தான் கோவலன் சென்றானா? இல்லை. அவன் சபல புத்தி படைத்தவன்; அந்தச் சபல புத்தியுடன் வாழ்வினையும் அவனை உந்திவிடுகிறது. அந்த நிலையிலே தான் அவன் மாதவியை அடைந்தானே தவிர இல்லறஇன்பத்தைப் பெறாததாலோ, கண்ணகியிடம் காணாத அழகை— மாதவி மாட்டுக் கண்டதாலோ அன்று என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும்.

'தெய்வம் தொழாஅள்
கொழுநற் தொழுவாள்
பெய்யெனப் பெய்யும்
மழை''

என்கிறான் வான்புகழ் வள்ளுவன். தெய்வத்தைத் தொழாது கணவனையே தெய்வமாக மதித்து வணங்குகின்ற பெண் காலமறிந்து பெய்யும் மழைக்கு ஒப்பாவாள் என்பது பொருள். இந்தக்குறளுக்கோர் எடுத்துக் காட்டாய் எங்கள் கண்ணகி விளங்குதலைக் காணலாம். கணவனைப் பிரிந்தவர் காமன் கோட்டத்தை வணங்கினால் கணவனைக் கூடி இன்புறுவர் என்று தேவந்தி உரைக்கின்றபோது அவளை நோக்கிப் ''பீடன்று'' என்று கூறுகின்றாள். அது பெருமையுடைய செயலன்று, என்பது அவள் எண்ணம்.

கணவனை மாதவிபோல் வெறுங் காதலனாகக் கருதினாலல்லள் எம் கண்ணகி. அவனைத் தெய்வமெனக் கருதுகின்ற தன்மையைக் கண்ணகியிடத்துமட்டுமே இளங்கோவடிகள் காட்டிப் போகின்றார். மாதவியிடத்து இப்பண்பை அவர் எங்குமே சுட்டிக்காட்டவில்லை. அன்றியும் மாதவியிடம் காணப்படுகின்ற அன்பு ஆரம்பத்தில் பொருளினால் பிறந்த அன்பு என்பதைக் கோவலன் வாயிலாக நாம் உணரக் கூடியதாகவுள்ளது.

கண்ணகியிடம் திரும்பி வந்த கோவலன் அவளை நோக்கிக் கூறுகிறான்,

'சலம்புணர் கொள்கைச்
சலதியோடாடிக்
குலந்தரு வான்பொருட்
குன்றம் தொலைந்த
இலம்பாடு நாணுத்தரு
மெனக்கு'

கோவலன் இழந்த பொருள் சிறிதா? இல்லை. வான்பொருட் குன்றம் என்றன்றோ குறிப்பிடுகின்றான். இதுவொன்றே போதுமே மாதவியின் அன்பு எத்தகைய போலியன்பு என்பதைக் காட்டுதற்கு. உயர்ந்த பெண்மையிடத்தான் தூய அன்பைக்காண முடியும். ஆனால் மாதவியிடம் காணப்படுகின்ற அன்போ பெண்மைக்கு மாசு தேடுகின்ற, பொருள் மீது காதல் கொண்டு பிறந்த அன்பு. இப்படி இருக்கையில் மாதவியைப் பெண்மையில் சிறந்தவள் எனப் பிதற்றுதல் பேதமையன்றோ. அதே வேளையில் கணவனின் வாடிய உள்ளத்தைக் கண்டு கண்ணகி என்ன கூறுகிறாள் தெரியுமா? 'சிலம்புள கொண்மின்' என்கிறாள். அதைக் கூறுகின்றபோது அவளுடைய முகபாவத்தையும் இளங்கோ காட்டிவிடுகின்றான்; வேதனையுடன் அதைச் சொன்னாளா கண்ணகி? இல்லை.

### இலக்கியப் பூஞ்சோலை

'நலங்கேழ் முறுவல்
நகைமுகங் காட்டிச்
சிலம்புள கொண்மின்
என்கிறாள்'

காதலன் பாடியதற்குப் போட்டியாகத் தானும் பாடவேண்டும் எனக்கருதிய மாதவியெங்கே? நகை முகம் காட்டிச் சிலம்பு கொள்க எனக் கூறிய கண்ணகியெங்கே? யார் பெண்மையிற் சிறந்தவர் என்பதை நீவிரே தீர்மானித்துக் கொள்ளுங்கள். பெண்ணிற்குக் கணவன் இருக்குமிடமே கோயிலாகும். எனக் கருதிற் கொண்ட கண்ணகி [illegible] [illegible]கிறாள். இதைக்கண்டு கோவலன் வருந்துகின்றான். வருந்துகின்ற அவனை நோக்கி தங்கள் சொற்படி ஒழுகுதலே என்கடன் என எடுத்துரைக்கின்றாள்.

'நாணமும் மடனும்
நல்லோர் ஏத்தும்



செல்வி
நிலகமணி திருமால்

பேணியகற்பும்
பெருந்துணையாக
என்னோடு போந்திங்கு
என்துயர்களைந்த
பொன்னே கொடியே
புனை பூங்கோதாய்!
இன் துணை மகளிர்க்
கின்றியமையாக்
கற்புக்கடம் பூண்ட
இத்தெய்வமல்லது
பொற்புடைத்தெய்வம்
யாங்கண்டிலயால்'

இந்தக் கண்ணகியைப் போன்று தெய்வத்தை நான் காணவில்லையென அவளைத் தெய்வமாக்கி நமக்கும் காட்டுகின்றார். சீரிய ஒழுக்கமும், உயர்பண்பும் நிறைந்த கவுந்தியடிகளே இன் துணைமகளிர்க்குள் தெய்வமென அவள் இயம்பி விட்டபின் இனியும் மாதவியே பெண்மையில் சிறந்தவள் என்று வாதிடுதல் பயனுண்டோ?

கொடியோன் செயலால் நீதிநெறி பிறந்த நெடுஞ்செழியப் பாண்டியனின் ஆய்வின்மையால் கோவலன் கொலையுண்டான். கொலையுண்ட செய்திகேட்ட மாதவி என்ன செய்தாள் வெறும் துறவுபூண்டாள்.

'காதலன் உற்ற
கடுந்துயர் கேட்டுப்
போதல் செய்யா
உயிரோடு நின்றே
பொற்கொடு மூதூர்ப்
பொருளுரையிழந்து
நற்றொடி நங்காய்
நாணுந்துறந்தேன்'

நாணின் பாவாய்
நீணில விளக்கே!
கற்பின் கொழுந்தே
பொற்பின் செல்வி'

என்று கண்ணகியை அதே இடத்து வைத்துக் கோவலன் பாராட்டுகின்ற உரைகளே போதுமே கண்ணகியின் பெண்மைத்தன்மையின் பெருமைதனைப்பேச எந்த இடத்திலாவது மாதவி இத்தகைய பாராட்டுதலுக்குட்பட்டாளா என்றால் இல்லை என்றே கூறவேண்டும். மாவினி என்ற மறக்குடி மங்கை குமரிக்கொற்றவைக் குரவையின் போது தெய்வமுற்றுரைக்கின்ற வார்த்தைகளைப் பாரீர்!

'இவளோ,
கொங்கச் செல்வி
குடமலையாட்டி
தென்தமிழ்ப்பாவை
செய் தவக்கொழுந்து.
ஒரு மணியாய் உலகிற்
தோன்றிய திருமாணி

என்கிறாள். இந்த வார்த்தைகளைவிடக் கண்ணகியின் சிறப்புக்கு வேறு சான்றும் வேண்டுமா? இதோ பிறிதோர் எடுத்துக்காட்டு. மதுரை நோக்கிச் செல்லும் வழியிலே துறவியான கவுந்தியடிகளைக் காணுகின்றனர். அந்தப் பெண்துறவி கண்ணகியை,

'தன்துயர் காணாத்
தகையால் பூங்கொடி

என்று மணிமேகலையில் சாரவர் உரைத்த காதையிலே மாதவி வருந்த மாலையை நோக்கிக் கூறுகின்றார். காதலன் இறந்ததும் உயிரோடு இருக்கிறேனே என்று காணப்படுகிறாளே தவிர அவள் உயிர் துறந்திலள். ஆனால் கண்ணகி என்ன செய்தாள்? கணவன் கொலையுண்டான் என்றதைக் கேட்டதும் கலங்கினாள்; துடித்தாள். கணவன் கொலையுண்டதைவிட அவன் கள்வன் என்ற களங்கத்துடன் கொல்லப்பட்டான் என்பதை எண்ணியே வேதனைப்படுகிறாள். கணவனைக் கள்வன் என்று கூறியகொடிய சொற்களைத் தாங்கிக்கொள்ளும் சக்தி அந்தக் கண்ணகிக்கு இருக்கவில்லை. அந்தக்களங்கத்தைத் துடைக்க முயல்கிறாள். மெய்யிற் பொடியும் விரிந்த கருங்குழலும்-கையிற் தனிச்சிலம்பும், கண்ணீருமாக நெடுஞ்செழியப் பாண்டியனிடம் நீதி கேட்கப் புறப்பட்டாள். வையைக் கோன் பாண்டியன் அந்த வஞ்சியைக் கண்டளவே தோற்றான். அக்காரிகை தன் சொற் செவியில் உண்டளவே தோற்றான் உயிர். மதுரையே எரிந்தது. தீத்திறத்தார் பக்கத்தைத் தேடித் தேடித் தீ எரிந்தது. கோவலன் களங்கம் நீங்கியது. அந்தக் கோமகளாம் கண்ணகியும் சேரநாட்டு மலைக்குன்றிலே ஏறி நின்று வானவூர்தியிற் சென்றாளாம்.

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டிசம்பர் 5ந் திகதி முதல்!

சினிமாஸ்
திரைகளில்



நடிகர் திலகம்
★ சிவாஜி,
ஜெமினி,
விஜயா
மற்றும் பலர் நடிக்கும்,

# திருவருட் செல்வர்

கடைசி வாரம்!— கிங்ஸ்லி (கொழும்பு) வெம்பிளி (கண்டி)
பிளாசா (வெள்ளவத்தை) ... ★ சிவாஜி, பத்மினி, விஜயா
—நடிக்கும்—
பாலாடை

## 2-வது வெற்றிவாரம்!

ஈரோஸ் (பாமன்கடை) மைலன் (கொழும்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)

(இரட்டை வேடங்கள்)
* ரவிச்சந்திரன், ஜெயலலிதா, மனோரமா, வி. கே. ராமசாமி, எஸ். ஆர். ஆர். வாசு நடித்த

# பணக்காரப் பிள்ளை

கெப்பிட்டல் (கொழும்பு)
* ஜெய்சங்கர் ... | ... * விஜயலட்சுமி
—நடித்த—

# வல்லவன் ஒருவன்

## ஜனத்திரள் நிறைந்த காட்சிகளுடன் 3 வது வாரமாக காட்சியளிக்கிறது!



கருத்து நிறைந்த வசனங்கள்! கண்கவர் காட்சிகள்! நெஞ்சை அள்ளும் அற்புத நடிப்பு! உள்ளத்தைத் தொடும் உணர்ச்சிமயமான சம்பவங்கள் பலவற்றைக் கொண்ட உன்னதச் சித்திரம்!!

சென்ரல் (மருதானை) ராணி (யாழ்நகர்) ஜோதி (திருமலை)

★ காதல் மன்னன் ஜெமினி கணேஷன், ★ எஸ். வி. ரங்கராவ்,
★ எஸ். எஸ். ராஜேந்திரன், ★ நாகேஷ், ★ எஸ். வி. சுப்பையா,
★ வி. கே. ராமசாமி, ★ பத்மஸ்ரீ சரோஜாதேவி, ★ ராஜசுலோசனா,
★ குமாரி சச்சு, ★ ஜி. சகுந்தலா, ★ ரேணுகா, ★ ராதாபாய்,
'டோமி' (நாய்) மற்றும் பலர் நடித்த

இயக்குநர், திலகம்' கே. எஸ். ஜி.யின்

# குல விளக்கு

கதை-வசனம் டைரக்ஷன்: கே. எஸ். கோபாலகிருஷ்ணன். (பாஸ்கள் ரத்து) இசை: கே. வி. மகாதேவன்.

வெகு விரைவில்
'மக்கள் திலகம்' எம். ஜி. ஆர்., ஜெயலலிதா, மனோகர், அசோகன், ஜோதிலட்சுமி, ராஜஸ்ரீ, சோ, சந்திரபாபு, நடித்த, —புரட்சி நடிகரின்—

# அடிமைப் பெண் (கலர்)

## சிலோன் தியேட்டர்சாரின் திரைகளில்

4வது வாரமாக காட்சியளிக்கிறது!
செல்லமகால் (கொழும்பு) வின்சர் (யாழ்நகர்) நெல்சன் (திருமலை)



கே. பாலசந்தரின் கதை வசனம், டைரக்ஷனில் உருவான
நாகேஷ், சௌகார் ஜானகி நடித்த

# எதிர் நீச்சல்

3 வது வாரமாக கெயிட்டியில்
ஜெமினி, ஏ. வி. எம். ராஜன்
நாகேஷ், விஜயநிர்மலா நடித்த

# பந்தயம்





எமது மார்கழி
திங்கள்
வெளியீடு

சௌகார் ஜானகி, வாணிஸ்ரீ
ரங்கராவ் நடித்த

# குழந்தை உள்ளம்



டைரக்ஷன்
சாவித்திரி—கணேஷ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் [illegible] கொழும்பு பண்டாரநாயக்க வீதி 194 ஏ. இலக்கத்தில் 1969 வருடம் நவம்பர் மாதம் 1-ந் திகதி திங்கட் கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது தொலைபேசி 23411